Kaye

# கடல்

அலை 04 JULI 1991

சமுதாய சஞ்சிகை



# கடல்

கடல் ஆக்கதாரர்களின் கருத்துகளுக்கு பூரண சுதந்திரம் அளிக்கிறது. கருத்து மோதல்களுக்கு கடல் களமாக விரும்புகிறது.

ஆசிரியர் குழு: சுழியோடிகள்

பேசாதீர்கள் செயல்படுங்கள்;

அறிவிக்காதீர்கள் செய்து காட்டுங்கள்

'கடல்' இலவசமாக வெளியிட இருந்த லங்கன்ரீட் நகர தமிழ் மக்களுக்கு பல வருடமாக இன்னாளான ஸ்ரீ உதவிகளை செய்து வரும் 'ரோஷி' [FRAU. KIRBERG] அவர்களுக்கும், PASTOR & HORST. WALTER LAND அவர்களுக்கும் இவர்களின் அறிவித்தலுக்கும் பின்னணியிலுள்ள திரு. R. கந்தசாமியவர்கள் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

Kadal சுழியோடிகள்

சிறுவர்கள் எழுதும் ஆக்கங்களும், சிறுவர்களுக்காக பெரியோர் எழுதும் ஆக்கங்களும் அலங்கரிக்க "முத்துப் பட்டாளம்" என்ற பகுதி காத்திருக்கிறது. எழுதுங்கள். வரவேற்கிறோம்.

# மழலைப் பட்டாளம்



## - சிறுவர் பகுதி -

**ரஞ்சன்மாமாவின்**

### ஒற்றுமை

அது ஓர் அடர்ந்த காடு. அங்கு ஒரு புலியும் வசித்து வந்தது. அந்தக் காட்டின் மிருகங்கள் புலிக்கு இரை (உணவு) ஆகின. இதனால், புலியின் கண்ணில் படாது மற்றையமிருகங்கள் ஒழித்து வாழவேண்டியதாயிற்று.

இதனால், புலிக்கு உணவு கிடைக்கவில்லை. அதற்குக் கோபம் வந்தது. அந்தக் கோபத்தில் ஒருநாள் காடே அதிரும் படியான பலத்தசத்தம் போட்டு உறுமியது. புலியின் இந்தப் பயங்கரச் சத்தம் கேட்டு என்னவோ ஏதோவென்று ஒழித்திருந்தவர்கள் எட்டிப்பார்த்தார்கள். இதேநேரம் புலியின் சத்தம் கேட்டு வேட்டைக்காரர்களும் புலியைப் பிடிப்பதற்கு வந்து கொண்டிருந்தார்கள்.

ஒழிந்திருந்த மான் கூட்டமும் பசி தாங்காமல், வெளியே வந்து புல் மேயத்தொடங்கின. இதனைக் கண்ட புலி மான்கூட்டங்களின் மீது பாய்ந்தது. அவற்றில் சிலவற்றைப் பிடித்துத் தின்றது. மற்றைய மான்கள் கவலையுடன் ஓடி மறைந்தன.

அடுத்தநாள் காலையும் புலியின் சத்தம் கேட்டது. ஆனால் இடைக்கிடை அழுகைச் சத்தமும் கேட்டது. அழுகைச்சத்தம்

கேட்டதால்,என்னென்று பார்க்க வெளியே வந்தார்கள். மான்கள் விரைவாக ஓடக்கூடியவை.அதனால் அவைகள் முதலில் வந்து பார்த்தன. வேட்டைக்காரர் விரித்த வலையில் புலி சிக்கிக்கொண்டிருந்தது.

மான்கள் திரும்பிச் சென்று மற்றைய மிருகங்களிடம் புலியின் நிலைமை பற்றிச் சொல்லின.அவைகளில் ஒரு பகுதியினர் புலிக்கு ஏற்பட்ட கதிக்கு மகிழ்வது போலக்காட்டிக் கொண்டன. ஆனால்,இவர்களுக்குள் வயது முதிர்ந்த மான் ஒன்றிற்கு இது பிடிக்கவில்லை. 'என்ன சந்தோசப்படுகின்றீர்களா?இன்றைக்குப் புலியைப் பிடிப்பவர்கள் நாளைக்கு எங்களைப் பிடியாமலா விடப்போகின்றார்கள்? இன்றைக்குப்புலி, நாளைக்கு நாங்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். புலி எப்படித்தான் என்றாலும் அதுவும் எங்களுடைய இனம் என்பதை மறந்து விடாதீர்கள்.வாருங்கள் எல்லோருமாகப் போய்ப்புலியைக் காப்பாற்றுவோம் என்று புறப்பட்டது. அதன் பின்னால் எல்லோரும் சென்றார்கள். மிருகங்கள் எல்லாம் கூட்டமாக வருவதைக் கண்ட வேட்டைக்காரர்கள் விழுந்தடித்துக் கொண்டு ஓட்டம் எடுத்தார்கள்.

வலையிலிருந்து புலியை மீட்டு எடுத்தார்கள். தான் செய்த கொடுமைகளை மறந்து எல்லா மிருகங்களும் தனக்கு உதவியதை நினைத்துப்புலி நன்றி கூறியது.உங்களுடைய உயிரையும் பொருட்படுத்தாது என்னைக் காப்பாற்றிய உங்களை இனிமேல் கொன்று தின்ன மாட்டேன் என்று உறுதி எடுத்தது.

அன்று முதல் எல்லா மிருகங்களும் ஒருவருக்கு ஒருவர் உதவியாகவும் சந்தோசத்துடனும் வாழத்தொடங்கினார்கள்

# விளங்கிவிட்டது

ஒரு காட்டில் ஒரு கரடிக் குடும்பம் வசித்து வந்தது. அந்தக் குடும்பத்தில் அம்மா அப்பாவுடன் கமலம், இராமு என்ற இரண்டு பிள்ளைகளும் வசித்து வந்தனர்.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவைப்பது அம்மாவின் வேலையாகும். ஒருநாள் பாடசாலைக்குக் கமலமும் இராமுவும் வந்து கொண்டிருந்தனர். திடீரெனக் கமலம் 'அண்ணா அண்ணா இன்றைக்குத் தேன் குடிப்போமா? 'என்றாள். அப்படியென்றால் இன்றைக்குப் பள்ளிக்கூடம் (பாடசாலை) இல்லை!. அருகில் ஒரு சோலைவனம் இருக்கிறது. வா அங்கே போனால் மூக்கு முட்டத் தேன் குடிக்கலாம்' என்று சொல்லிக்கொண்டு, தங்களுடைய புத்தகங்களை ஒரு பற்றை மறைவில் ஒழித்து வைத்தார்கள். இரண்டு பேரும் தேனிருக்கும் இடத்திற்கு ஓட்டம் எடுத்தார்கள்.

இருவரும் சோலைவனத்திற்குச் சென்றார்கள். அங்கே ஆறஅமர இருந்து தேன் குடிக்கத் தொடங்கினார்கள். அப்பொழுது அங்கே குருவிகளும் முயல்களும் வந்தன. அவர்களைக்கண்டதும் இருவருக்கும் தாங்கள் பாடசாலைக்குப் போகாதது தெரிய வரப்போகின்றதே என்று கவலைப் பட்டார்கள்.

அப்போது அங்கே வந்த குருவி ஒன்று 'என் பிள்ளைகள் பள்ளியில் அடிக்கின்றார்கள் என்று போகமாட்டேன்' என்கிறார்கள்' என்றது. முயலும் ஒன்று தன் பிள்ளைகளும் அப்படித்தான் சொல்லிக் கொண்டு போகமாட்டேன் என்கிறார்கள் என்றது.

'அப்படியா? அதற்கெல்லாம் கவலைப்படாதீர்கள். நாங்கள் இருக்கின்றோம். உங்களுடைய பிள்ளைகளை எம்மிடம் கூட்டி வாருங்கள். நானும் அண்ணாவும் அடிக்காமல் படிப்பிக்கின்றோம்' என்று கமலம் சொன்னாள். குருவியும் முயலும் சந்தோசப்பட்டன. இதோ கூட்டிவருகிறோம் என்று சொல்லிச் சென்றன. சிறிது நேரத்தில் பிள்ளைகளுடன் அவர்கள் வந்தார்கள்.

கமலாவுக்கும் இராமுவுக்கும் ஒரே சந்தோசமாக இருந்தது. பள்ளிக்குப் போகாமல் ஒழித்த தமக்கு ஆசிரியர் வேலை கிடைத்து விட்டதே என்று. பிள்ளைகள் எல்லோரும் வணக்கம் சொன்னார்கள். வகுப்பு இரண்டாகப் பிரிக்கப்பட்டு, இராமு இரண்டாம் வகுப்பும், கமலம் முதலாம் வகுப்பும் படிப்பிக்கத் தொடங்கினார்கள்.

பிள்ளைகள் பாடத்தில் கவனம் இல்லாமல் குழப்படிகள் செய்து கொண்டு கதைத்துக் கொண்டிருந்தார்கள். இரண்டாம் வகுப்பு ஆசிரியருக்குக் கோபம் வந்துவிட்டது. இவர்கள் ஏன் ஆசிரியர்களிடம் பேச்சும் அடியும் வாங்கினார்கள் என்று தெரிகின்றதா என்று பெற்றோர்களைப் பார்த்துக் கேட்டார். அவர்கள் இப்பொழுது எங்களுக்கு விளங்கி விட்டது என்று சொல்லிக் கொண்டார்கள்.

 [ 40ம் பக்கம் பார்க்க----- ]



# வேண்டுகோள்

வெளிநாட்டுச் சுகபோகங்களில் மூழ்கி, தாயகத்தை மறந்து மாயைப் போர்வையுள் மயங்கிக் கிடந்தவர்களைத் தட்டி எழுப்பிய பெருமை ஆனி 30 ஐ சேரும்.

தங்களுடைய தொலை நோக்கற்ற பார்வையில் தம் சந்ததியின் எதிர்காலத்தைப்பற்றிய சிறிதளவான தீர்க்கதரிசனமற்ற வறட்டுப் போக்கால் தமிழைப் புறந்தள்ளி, இன்று அந்த உலகமறியா அப்பாவிப் பாலகர்களும் தாயகத்தை மிதிக்கும்போது சந்திக்கப்போகும் பிரச்சனைகளைப்பற்றிய அச்சமூட்டும் எதிர்நோக்குகள் தற்பொழுதுதான் நாற்று மேடைக்குப் போயுள்ளன.

ஆனால் தற்பொழுது கூட, ஒரு வருட விசா அனுமதி பெற்றவர்களில் பலர் நாடு திரும்ப மாட்டோம் என்ற நிலையில் வாழ்வதையே அவதானிக்க முடிகிறது. பொதுவாக ஜேர்மனியின் தாற்பரியம், இன்று நேற்றல்ல பல வருடங்களாகவே அந்நிய நாட்டவர்களுக்கு எதிரானதாகவே இருந்ததென்பதை அறிந்தும் ஏனோ கனவாக நினைத்து அற்ப திருப்தி அடைகின்றனர்.

இந்த நிலையில் என்றோ ஒரு நாள் விரைவாக தாயகத்தை நாம் மிதித்தே தீர வேண்டும் என்று இந்நாட்டு அரசியல்வாதிகள் எதிர்பார்க்கின்ற நிலையில், அதற்கு எங்களில் எவருமே மறுப்புக் கூற முடியாது. ஏனெனில், நாம் எல்லோரும் அரசியல் தஞ்ச விசாரணையின்போது, நாட்டில் பிரச்சனை தீர்ந்தால் போய்விடுவோம் என்று கூறியுள்ளோம். எனவே, தற்போது எம்மால் இந்த அரசியல்வாதிகளுக்குக் கூறக் கூடிய ஒரு விடயம் யாதெனில் நாட்டின் பிரச்சனைகள் சுமுகமான நிலையடையும்வரை திருப்பி அனுப்புதலை நிறுத்த வேண்டும் என்பதே.

வதிவிட அனுமதி, வதிவிட உரிமை போன்ற விசாக்களைப் பெற்றவர்கள், நாம் இங்கு என்ன நிலையில் எதற்காக வந்தோம் என்ற காரணங்களை உதாசீனப்படுத்திய நிலையில் தாயகத்தை எட்டிப் பார்த்து வந்ததன் பிரதிபலிப்பு எல்லா ஈழத்தமிழரையுமே போலிகளாக்கிப் போக்கற்ற இடத்துக்கு அனுப்பிப் பொசுங்க வைக்க, இந்நாட்டு அரசியல்வாதிகளுக்கு அவலானாலும், இங்கு அகதியென்று வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் அகதிகள் என்ற நிலையில் தனிப்பட்ட அரசியல் கருத்துக்களை ஒருபுறம் மூட்டை கட்டி வைத்துவிட்டு ஒன்றுபட்டு ஒரே குரலாக, நாட்டில் சுமுக நிலை ஏற்படும்வரையில் திருப்பி அனுப்புதலை நிறுத்த வேண்டும் என்று தனிப்பட்ட ரீதியிலோ அல்லது சமூக நல அமைப்புகளின் ஊடாகவோ நேரடியாகக் குரல் கொடுப்பது அவசியமாகிறது.

தற்போது பல இடங்களில் பல பொது ஸ்தாபனங்களின் ஆதரவுடன் இலங்கைத் தமிழரை நாடு

திருப்பி அனுப்ப இது தகுந்த தருணமல்ல என்பதை எடுத்துக் காட்ட பல ஊர்வலங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இவற்றினோடு ஒவ்வொரு அகதித் தமிழனும் தன்னை இணைத்துக் கொண்டு தனது பாதுகாப்பிற்காகத் தன்னாலான முன்னெடுப்புகளில் முனைய வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.



# ஒன்று படுவோம்

இலங்கையரசின் பேரினவாத ஒடுக்குமுறைகளுக்கும் அரசியலுக்கும் முதலாவதாகவும் முழுமையாகவும் பலியானவர்கள் தென்னிலங்கையில் வாழும் தமிழர்களேயாவார். இதில் மலையகத் தமிழர் மிகவும் கொடூரமாகப் பேரினவாத அரசியலுக்கு முகம் கொடுத்தார்கள். இதற்குப் பல உதாரணங்கள் உண்டு. இலங்கையின் அரசியல் அதிகாரங்கள் பிரித்தானியரிடமிருந்து இலங்கையர் மையப்படுத்தப்பட்டு, ஒரு சில மாதங்களுக்குள் மலையக தமிழரின் பிரசாவுரிமையைப் பறித்தெடுப்பதற்காகவே பிரசாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் பிறகு இவர்களின் குடியுரிமையும் பின்பு வாக்குரிமையும் பறித்தெடுக்கப்பட்டதோடு பேரினவாத அரசியல் திறந்தவெளிக்குக் கொண்டுவரப்பட்டது. இந்த உந்து சக்திதான் தனிநாட்டுக் கோரிக்கைக்கு வித்திட்டது. இவை யாவற்றையும்

இனவாத அடிப்படையிலான
ராணுவ நடவடிக்கைகள்மூல,
ஒடுக்குவதற்காகப் பதவியில் இ
ருந்த அரசுகள் மேற்கொண்ட நட
டிக்கைகள் அரச பயங்கரவாத
திற்கெதிரான தனிநாட்டுக் கோ
க்கையை முன்னெடுக்கும் ஆயுத
போராட்டத்திற்கு வழிவகுத்தது. இ
போராட்டம் வட கிழக்குத் தமிழ்
ளைஞர்களிடையே பன்மடங்கா
பரிணமித்தது. எனினும் பதவியி
இருந்த அரசுகள், தமிழ் மக்களி
மொத்த உரிமைகளை நிலை
ட்ட நடவடிக்கைகள் மேற்கொ
ளாமல் இலங்கை இராணுவத்
சிங்களமயப்படுத்தியதோடு, பயங்
வாதத் தடைச்சட்டம், அவசரகா
விதிமுறைகள் போன்ற ஜனநாய
விரோதச் சட்டங்களை நடைமு
றைப்படுத்தி இனப்படுகொலை
வம் தீர்வு காண விளைந்தது
இன்று முழு இலங்கையுமே போ
களமாக மாற்றப்பட்டு ஆயுதக்
க்களின் ஆதிக்கத்துக்கும் வழிவ
த்துள்ளது. இலங்கைத் தமிழ் பே
ன்ற மக்களின் உரிமைப் போரா
டத்திற்காகத் தங்களை முழுமை
அர்ப்பணித்த அன்றைய பல இள
ஞர்களில் சிவகுமாரன் போன்ற
ர்களையும் மறந்துவிட முடியாத
அன்று அவர்கள் எந்த நோக்க
ற்காக, எந்த உரிமைக்காக
தங்களின் வாழ்வை அர்ப்பணி
தார்களோ, அதிலே ஒரு நியாய
இருக்கிறது. இன்றோ அவர்கள்
கனவுகள் சிதைக்கப்பட்டு ஆயு
க்குழுக்களின் அராஜகங்களுக்
அப்பாவி மக்கள் பலிய
க் கொண்டிருக்கிறார்கள். இ


டைமுறையின் விளைவாக தமிழ் பே
ம் இனம் பல்வேறு அநீதிகளுக்கும்
டுபாடுகளுக்கும் மத்தியில் பயந்து
லும் பீதியுடனும் மரண விளிம்பில்
ழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ன்று விடுதலை என்ற பாதையை
லங்கி பலரும் பல கோணங்களில்
ணி வருகின்றனர். தங்கள் தல
மைப் பதவிகளுக்காக ஒருவரை
ருவர் அழித்துக் கொண்டதும்,
ந்த உரிமைக்காக எந்த மக்களு
காக ஆயுதம் ஏந்தினார்களோ அ
த ஆயுதங்கள் மக்கள்மேல் திணி
க்கப்பட்டதும், அந்நிய சக்திகளின்
பட்டாளிகளானதும், இலங்கைப்
ரினவாத அரசின் கைக்கூலிக
ளானதும், வடக்கிலும் கிழக்கிலும்
ஸ்லீம்கள் பெருமளவில் விரட்டி
டிக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்
ட்டதும், இன்று தங்களைத் தாய்
மண்ணாதிகள் என்று கூறிக் கொ
ளரும் புளொட் குண்டர்களும் தங்
ள் அராஜகங்களை விஸ்தரித்து
ஸ்லீம் மக்களைக் கொலை செ
வதும் கைது செய்வதும்; புலியெ
று சந்தேகப்படுவோர் காணாமற்
போவதும், பெண்களைப் பாலியல்
ன்முறைக்குட்படுத்துவதும் - இப்ப
ப்பட்ட துரோகத்தனங்கள் மக்க
ளிடமிருந்து அந்நியப்பட வைப்பது
மயாகும்.

கிழக்கிலே இலங்கை இராணுவ
கூட்டுடன் தமிழ் இயக்கங்களின்
லேச்சத்தனங்களும், வடக்கிலே
யுதமேந்திய இன்னொரு குழுவின
ன் அராஜக நடவடிக்கைகளும்
தற்கிலே அரசபடைகளும் தமிழர்
ழுக்களும் இளைஞர்களைக் கைது
செய்து பணம் பறிப்பதும் சந்தேகத்
துக்கிடமானவர்கள் கொலை செய்ய
ப்படுவதும் மறுபுறம் மலையகத்திலே
தமிழ் இளைஞர்கள் அரசின் கொ
டுமைகளுக்கு ஆளாவதும் சிங்களக்
காடையர்களால் கடத்தப்படுவதும்
மலிவதற்குக் காரணம் தமிழ் இயக்
கங்கள் தமிழ் மக்கள்மேல் காட்டும்
ஆயுத பலாத்காரங்களே. இவர்களு
க்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள்
அரசுக்குச் சாதகமாக அமைந்துள்
ளன. தமிழ் மக்களைப்பற்றி கொஞ்
சமேனும் கவலைப்படாத அரசும்,
இயக்கங்களும், பாராளுமன்ற எதிர்
க்கட்சிகளும் தமிழ் பேசும் மக்களி
ன் சுயநிர்ணய உரிமையை நி
லைநிறுத்த மாட்டா. மாறாக, சிங்
கள, தமிழ், முஸ்லீம் பிரச்சனைகளு
க்கு மேலும் தூபமிட்டு, அதை வளர்
த்து ஒருவரையொருவர் அழித்துக்
கொண்டு போகும் நிலையையே உ
ருவாக்கிக்கொண்டு வருகின்றனர்.
அன்றைய அரசியல் தலைவர்களு
ம் சரி, இன்றைய இயக்கத் தலை
வர்களும் சரி தனிநாட்டுக் கோரிக்
கையை முன்வைத்து தங்களின்
சுயநலங்களுக்காக இளைஞர்க
ளையும், யுவதிகளையும் பலித்
ததையும் பாவிப்பதையும் ஒவ்வொ
ரு தமிழனும் புரிந்து கொள்ள வே
ண்டும்.

மகாத்மா காந்தியும் நேதாஜியும்
இந்தியாவின் சுதந்திரத்திற்காகப்
போராடினார்கள். அவர்களின்
பாதை வேறாக இருந்தது. அதற்
காக ஒருவரையொருவர் அழித்து
க் கொள்ளவில்லை. இன்று ஜன
நாயகத்தைத் தேடி எங்கே ஓடுவ

[ 9ம் பக்கம் - - - ]


அதிகாரம்
ஆணவம்
ஒடுக்கப்பட்ட மக்கள்

...தனைத் தெரியாமல் போக்கிடமற்று
...வாழும் எம் மக்களைப்பற்றி அனை
...த்துத் தமிழ்க் குழுக்களும் சிறிதள
...வாவது சிந்திக்க வேண்டும். எனவே
...முரண்பாடுகளைக் களைந்து விரோ
...த மனப்பான்மையை மறந்து பழிவா
...ங்கும் நடவடிக்கைகளைக் கைவிட்
...டு ஒன்றுபட்டு மக்களுடன் இணை
...ந்து போராட முன்வர வேண்டும்.
...இதனைவிடுத்து மானம் வீரம் என்
...று பழைய சரித்திரங்களில் பொய்க
...ளைக் கூறிக் கொண்டிருந்தால்,
...நடுரோட்டில் நிர்வாணமாகும் நி
...லையில் ஒவ்வொரு இயக்கத்தின்
...முகத்திரையும் கிழியும். மக்களின்
...பெருமளவு அழிவால் எமது மண்
...நாற்றமெடுத்து மக்கள் இல்லாத
...மண்ணை நேசிப்பதில் என்ன இ
...லாபம்?!

தங்கள் சுய இலாபங்களுக்காக
இலங்கை அரசும் இயக்கங்களும்
மாறிமாறி இணைவது ஒன்றும்
புதியதல்ல. இன்று கைக்கூலிகளோ
டு கைக்கூலிகளாகச் சேர்ந்த இய
க்கங்கள், அழித்துக் கொள்வதிலே
ஒன்றிநிற்கின்றார்களேயொழிய, இத
னால் அரசிற்கே இலாபம் என்ப
தை எண்ணிப் பார்க்கிறார்கள் இ
ல்லை.

ஜனநாயகத்தைத் தேடி எங்கே
ஓடுவதென ஏங்கிடும் எஞ்சியுள்ள
இலங்கைத் தமிழரின் நலன் கரு
தியாவது ஒன்றுபட்டு எமது மண்
ணுக்காகத் தமிழ் — முஸ்லீம் எ
ன்ற பேதங்களைக் களைந்து,
காட்டிக் கொடுப்புகளைக் கைவி
ட்டு இலங்கை அரசிற்கெதிராக
ஒன்றுபட வேண்டும்.



உலகத் தமிழர் இயக்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட 'தமிழாலயம்'
என்ற சிறுவர் பாடசாலை 'லங்கன்பீல்ட்' நகரில்
சிறப்பாக நடைபெறுகிறது. ஆரம்பித்தவர்களுக்கு எமது
பாராட்டுக்கள். தொடர வாழ்த்துக்கள்.

காலம் :- 9.30 மணி — 2.30 மணி. சனிக்கிழமை மட்டும்.
இடம் :- Metzmacher Schule, 4018 Langenfeld.

# ஏக்கம்

திருமதி. க. கிருஷ்ணபிள்ளை

பாலூட்டி வளர்த்த அன்னை
பாசமுடன் காத்த அன்னை
தாலாட்டில் வீரத்தையே தமிழாலே ஊட்டிவிட்டாள்
சீராட்டி வளர்த்த மக்கள் சிதறிக் கலைந்துவிட்டார்
அவள் பாயில் படுத்துவிட்டால் பார்ப்பதற்கோ யாருமில்லை
ஊரும் உறவுமுறையும் ஒப்புக் கொடுவதில்லை
ஒருநேர உணவினையும் உவந்தளிக்க யாருமில்லை
அந்த நிலையினிலும் அன்னை அவள் ஏங்குகின்றாள்
அன்பாய் வளர்த்த மக்கள் அருமையாய்ப் பார்த்த மக்கள்
அந்நிய நாட்டில் அகதிகள் ஆகிவிட்டார்
என்று எண்ணி ஏங்குகிறாள் இதயமுள்ள தாயவளும்
அகதியாய் வாழ்ந்தாலும் இங்கோ பலர் ஆடம்பரமாய் வாழ்கின்றார்
ஜோசல் பணத்தினிலே சொர்க்கத்தைக் காணுகின்றார்
தாயின் முகம் மறந்து தந்தைதனை மறந்து
நாளுக்கொரு உடையும் நாகரீக ஆடைகளும்
நாவினிக்கும் நல்விருந்தும் நவ நவமாய் அணிமணியும்
கூடி விருந்தும் உண்டு குதூகலமாய் வாழுகிறார்
தாய் தந்தை மறைந்துவிட்டார் என அச் செய்தி கேட்டால்
அதற்கோர் 'தனிப்பார்ட்டி', எத்தனை பத்திரிகை
இலங்கையிலும் உண்டோ அத்தனை தன்னிலும்
மரண அறிவித்தல் தமது பெயருடனே !
தாம் வாழும் நாட்டின் பெயரும் தவறாமல் போட்டிடுவர்
இந்த நிலை மாறி எமை என்றவரின்
நலம் வேணும் நான் என்றுமேயும்
என்றெண்ணி ஏங்குகிறேன்.

# ஊமை இரவுகள்

• ஊரவன் •

"தர்சிகா! எணை பிள்ளை--- இஞ்சை வாணை பிள்ளை---- மீனாச்சி அக்கான்ரை புருசன் கொழும்பாலை வந்திட்டாரோ எண்டு பாத்துக்கொண்டு வா பிள்ளை---" என்று பக்கத்தில் உள்ள மீனாட்சி அக்கா வீட்டிற்கு தர்சிகாவை அனுப்பினாள் தனம் அக்கா. அங்கு சென்ற தர்சிகாவிற்கு, மீனாட்சி அக்காவும் அவரது மகள் பூர்ணிமாவும் கோவிலுக்குப் போன விசயம் தெரிய வந்தது.

அன்று சனிக்கிழமை. சனியன் மாற்றத்திற்காகப் பூசை செய்வதற்காக, காலையில் எழுந்து பெருமாள் கோவிலுக்குப் போய்விட்டனர் மீனாட்சி அக்காவும் பூர்ணிமாவும். தர்சிகாவும் அவர்களைச் சந்திப்பதற்கு சைக்கிளில் கோவிலை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள். வழியில் மீனாட்சி அக்காவும் பூர்ணிமாவும் வந்துகொண்டிருந்தனர்.

"என்ன தர்சிகா--- இவ்வளவு தூரம்... கோவிலுக்கே போறாய்? அதிசயமாய் இருக்கே---!" என்று கேட்டாள் மீனாட்சி அக்கா.

அதற்கு தர்சிகா, "இல்லை மீனாச்சியக்கா--- என்ன--- உங்களுக்கு தெரியும்தானே நான் கோவிலுக்கு போறதில்லை எண்டு. என்ரை அம்மாவைக் கோவிலுக்கு முன்னாலை வைத்து தமிழ் இராணுவம் சுட்டதைப் பார்த்ததிலை இருந்து கோவிலுக்கே போறதில்லையே---" என கவலையுடன் கூறியவள் மேலும் தொடர்ந்தாள்.

"மீனாச்சி அக்கா... பூர்ணிமான்ரை அப்பாட்டை இருந்து ஏதாவது பதில் வந்ததா அல்லது அவர் கொழும்பிலையிருந்து வந்துவிட்டாரோ எண்டு அம்மா கேட்டுக் கொண்டு வரச் சொன்னவ--- அதுதான் வந்தனான்" என்று சொன்னாள்.

"அடி பிள்ளை தர்சிகா, அந்த மனுசன் இடையிலை வந்துகொ

ண்டிருக்கும்தானே... ஏனென்டால் இடையிலை வவுனியாவிலை ஏதோ பிரச்சினையாம். அந்த மனுசன் வவுனியாவிலை எப்பிடியும் தங்கித்தான் வரும். ஏண்டி பிள்ளை, உன்ரை கொண்ணன் ஏதாவது கடிதம் போட்டவனே... என்னவாவும் பணம் கிணம் அனுப்பினவனோ?" என்று கேட்டாள் தனம் அக்கா.

"ஓம் அக்கா, ஏதோ பணம் அனுப்பியிருக்கிறானாம். வந்து கடையொன்றில் எடுக்கட்டாம். அதுதான் கொழும்புக்கு எப்படிப் போறதெண்டு தெரியேலை..." என்று மனவேதனையுடன் சொன்னாள்.

"தங்கா, நீ ஒண்டுக்கும் யோசிக்காதை பிள்ளை. என்ரை மனுசன் வந்ததும் இதைப்பற்றி அந்தாளுடன் கதைக்கிறன். திரும்பவும் கொழும்புக்குப் போகேக்கை அவரோடை போகலாமெல்லே... என்ன சரிதானே..." என்றாள் மீனாட்சி அக்கா.

மூவரும் வீட்டை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தனர்.

தனம் அக்கா... அந்தக் கிராமத்திலேயே நடுத்தரப் பணக்காரர். அவவுடைய புருசன் ஒரு மொத்த வியாபாரி. இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும்தான் அவர்களுக்குப் பிள்ளைகள். மூத்த மகன் சில இளைஞர்களிடையே ஏற்பட்ட மோதல்களில் ஈவிரக்கமற்ற முறையில் கொல்லப்பட்டான். தனம் அக்காவின் புருசன் சில இளைஞர்களுக்கு உதவி செய்தமைக்காக வேற்று இளைஞர்களால் கொலை செய்யப்பட்டதோடு, கடை முழுவதும் கொள்ளையடிக்கப்பட்டபின் தரைமட்டமாக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, அந்தக் கிராம மக்களால் 'நல்லதொரு மனுசன்' என்று புகழப்பட்டவர், அந்த இளைஞர்களால் 'சமூக விரோதி' என்று முத்திரையிடப்பட்டார். இத்தனையை சொல்லை அந்த ஊர் மக்கள், அந்தச் சமூகம் ஏற்றுக் கொள்ளுமா? இரண்டாவது மகன் பாபுவை வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டனர் அந்தச் சமூகப் பண்பான மக்கள்.

இன்று வெளிநாட்டில் வசிக்கும் பாபுவின் பணம் மூலம்தான் தனம் அக்கா மட்டுமல்ல, அந்தக் கிராம மக்களில் பலர் வாழ்கின்றனர். தன் புருசன் எப்படி மக்களிடம் அன்பும் கருணையும் இரக்கமும் காட்டினாரோ அதைப் போலவே இன்று பாபுவின் பணம் வந்ததும் அவர்களும் வாழத் தாங்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் தனம் அக்கா. பாபுவின் கடிதம் எப்போ வருமென்பது தாயின் ஆவல். ஆனால் எப்போ பணம் வருமென்பது அவ்வூர் மக்களின் எதிர்பார்ப்பு. அவ்வூர் மக்கள் சாப்பிட உணவில்லை என்றாலோ உடுக்க உடுபுடவை இல்லை என்றாலோ உதவி செய்ய முடியாத அவ்வூர் இளைஞர்கள் இருந்தாலென்ன செத்தாலென்ன என்பதும் அவர்களுக்கென்று ஒரு இளைஞர் சங்கம் என்பதும் ஜீரணிக்க முடியாத உண்மையே. யார் பட்டினி கிடந்தாலும் யார் மிருகங்கள் மாதிரி உடுபுடவை இன்றி

அலைந்தாலும் அவர்களுக்கு எப்ப
டியும் பிச்சை போட்டே தீர வேண்
டும். அந்தக் கிராம மக்களால்
முடியுமா? ஒரு நேர உணவிற்கே
வழியில்லை என்றபோது எப்படி
அவர்களுக்குப் பிச்சை போட முடி
யும். பாரதி அன்று சொன்னான்,
'ஒருவனுக்கு உணவில்லை எனில்
ஜெகத்தினையே அழித்திடுவோம்'
என்று. ஆனால் அந்தக் கிராமத்
தில் ஒருநேரம் பிச்சையில்லை
என்றபோது மக்களுக்கு ஏற்படு
த்தப்படும் சித்திரவதைகளும் கொ
டுமைகளும் கவலைக்கிடமானவை
யே. எத்தனையோ கொடுமைக
ளையும் சித்திரவதைகளையும்
தாங்கிய தனம் அக்கா, தனது
மக்களுக்காக தன்னால் முடிந்த
வரையில் அவ்வூர் இளைஞர்களு
க்குப் பிச்சைபோட்டுக் கொண்டி
ருக்கிறாள். ஏன்? எதற்காக?!
தனது மகள் தர்சிகாவின் எதிர்
காலத்திற்காகத்தான். அவளும்
கரைசேர்ந்துவிட்டாள் என்றால்
தான் நிம்மதியாகப் புருஷனிடம்
போய்விடுவேன் என்று எல்லோரி
டமும் சொல்லிக் கொண்டிருக்கி
றாள்.

"அம்மா...அம்மா! பூர்ணிமான்
ர அப்பா இன்னும் வரேல்லை
யாம். வவுனியாவிலை எங்கை
யாலும் நிக்கலாமாம் எண்டு
மீனாச்சியக்கா சொன்னவ"
என்றாள் தர்சிகா.

"சரி பிள்ளை, இஞ்சை வா.
இந்தச் சோத்தைப் பாத்து இறக்
கு--- நான் அங்காலை போய்
தென்னமட்டை காய்ஞ்சதைப்
பாத்து எடுத்துக் கொண்டு
வாறன் பிள்ளை---" என்றவாறு
புறப்பட்டுப் போனாள் தனம்
அக்கா. தர்சிகா சமையலில்
இறங்கினாள்.

மறுநாட் காலையில்---

"எடி பிள்ளை தர்சிகா-- எங்கை
உன்ரை கொம்மா...என்ரை மனு
சன் காலமைதான் வந்தது...
இந்தா...இதிலை கொஞ்சம் கொ
ஞ்சம் அரிசி, மா, சீனி, சக்கரைச்
சாமான்கள் இருக்கு. கொம்மாட்டை
குடு பிள்ளை. நாளைக்கு மறும
டிக் கொழும்புக்குப் போகப்போகு
தாம். நீ போறதாய் இருந்தால்
இண்டைக்கே அனுமதி எடுக்க
வேணும். சரி நான் வரப் போறன்.
சொல்லடி கொம்மாட்டை..." என்று
மீனாட்சி அக்கா கூறினாள்.

"சரி அக்கா, அம்மாட்டைச் சொ
ல்லுறன்" என்றாள் தர்சிகா.

கோவிலுக்குப் போய்விட்டு வரும்
வழியில் மீனாட்சி அக்காவைக்
கண்டு விபரங்களை அறிந்த
தனம் அக்கா, தர்சிகாவைக்
கொழும்புக்கு அனுப்ப முடிவு செய்
தாள்.

கொழும்பு செல்வதற்கான அனு
மதி பெறுவதற்காக இளைஞர்
சங்கத்திற்குப் போனார்கள் தனம்
அக்காவும் தர்சிகாவும். இளைஞ
ர்கள் கொழும்பு செல்வதற்குரிய
நிபந்தனைகளைக் கூறினார்கள்.

'முதலில் நீங்கள் 2 பவுண்
அல்லது 10,000/= ரூபா பணம்
தரவேண்டும். பின்பு வவுனியாவ
ரை போவதற்கான கட்டணமாக
800/= ரூபா தர வேண்டும். கடை

சியாக வயது 30க்கு மேற்பட்டிருக்க வேண்டும்.'

எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்ட தனம் அக்கா, தர்சிகாவின் வயது குறைவென்று அவர்களுக்கு தெரியும் என்பதை நினைத்துக் கலங்கினாள். பின்பு கொஞ்சப் பணம் கூடுதலாகக் கொடுத்து 21 வயதான தர்சிகாவிற்கு கொழும்பு போவதற்கான அனுமதி வாங்கினாள். அன்றிரவு தூக்கம் எப்படி வரும்? தர்சிகாவை ஒருவனின் கையில் பிடித்துக் கொடுக்கும்வரை எப்படித் தூக்கம் வரும்?! மாதாமாதம் வேண்டிய போதெல்லாம் பிச்சையாகப் பணம் கொடுத்தும், அவர்களுக்கு கையிலும் காதிலை இருந்து பவுணும் கொடுக்க வேண்டும். வயது குறைவென்றதும் இலஞ்சமும் கொடுக்க வேண்டும். இப்படியான சூழ்நிலைகளிலும் தர்சிகாவிற்காக வாழவேண்டுமே என்று நினைத்துக் கொண்டாள்.

காலையில் மீனாட்சி அக்காவின் புருஷனுடன் புறப்பட்டாள் தர்சிகா. வழியனுப்பிவிட்டு வீட்டுக்குச் சென்ற தனம் அக்கா தன்னிடமிருந்த உணவுப் பொருட்களை ஏனையோருக்கும் பகிர்ந்தளித்தாள்.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட தர்சிகா மூன்றாவது நாள் வவுனியாவை அடைந்தாள். அங்கிருந்து மறுநாட் காலை புகைவண்டி மூலம் கொழும்பைச் சென்றடைந்தாள். கொழும்பைக் கண்டு வியந்தாள். பிறந்ததில் இருந்து 'கொழும்பு' என்று கேள்விப்பட்டதுதான் அவளுடைய நிலைமை.

பூர்ணிமாவின் அப்பாவுடன் எல்லா இடமும் சுற்றித் திரிந்தாள். எல்லா இடத்தையும் இரசித்தாள். இவ்வளவு நாளாக சுடுகாட்டிலே அடங்கி ஒடுங்கி வாழ்ந்தவளுக்கு கொழும்பு சொர்க்கலோகமாய்த் தெரிந்தது. எல்லாவற்றினையும் அளவற்ற சந்தோசத்துடன் இரசித்தவள் ஒருகணம் தன்தாயை நினைத்ததும் ஆடி அடங்கிப் போனாள். தன் தாய், தன் சொந்த ஊரின் நிலைமைகளை எண்ணியவள், தமையன் பாபுவின் தொலைபேசித் தொடர்பிற்காக தமிழ் மக்களின் வீடொன்றில் தங்கினாள். அவர்களுடன் சந்தோசமாகக் கொஞ்ச நேரமாவது இருக்க விரும்பினாள்.

தொலைபேசி மணி ஒலித்தது.

"தர்சிகா... உங்களுக்குத்தான் தொலைபேசி..."

தொலைபேசியை நோக்கி ஓடியவள் சற்று மௌனமானாள். அண்ணன் பாபு அவர்களைவிட்டுப் பிரிந்து போய் ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. தொலைபேசியை எடுத்து, "ஹலோ அண்ணா... நான் தர்சிகா கதைக்கிறேன்" என்றாள். மறுமுனையில், "தங்கச்சி... நான்தான் பாபு அண்ணா..." என்றதும் தர்சிகா அழத்தொடங்கிவிட்டாள்.

இருவரும் பல நிமிடங்கள் தங்களை மறந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இடையில்,
"அண்ணா... நான் இன்று யாழ்ப்பாணம் போகிறேன். அம்மா தனிய இருக்கிறா... அண்ணா!

மீண்டும் உன்னை எப்போ பார்ப்பேனோ..." என்று பீறிட்டு அழுதாள் தர்சிகா.

"தங்கச்சி, உன்னையும் அம்மாவையும் விரைவில் இங்கே கூப்பிடுவேன்... பயப்படாமல் இரு. நான் நேரடியாகப் பணம் அனுப்பாமல் விட்டமைக்கு அங்குள்ள இளைஞர்களே காரணம்." என்று தொலைபேசியை வைத்தான் பாபு.

அண்ணாவுடன் கதைத்தது ஒருபக்கம் சந்தோசம். அவனை எப்போது நேரில் சந்திப்போம் என்பது மறுபக்கம் ஏக்கம். அத்தனைக்கும் மத்தியில் தாயின் தனிமையை எண்ணி ஒருபக்கம் வேதனை.

பணத்தை எடுத்துக் கொண்டு மீண்டும் யாழ்ப்பாணத்தை நோக்கி இருவரும் புறப்பட்டனர். வவுனியாவை அடைந்தவர்கள் அங்கு இருநாட்கள் தங்கிவிட்டு யாழ்ப்பாணத்தைச் சென்றடைய மூன்று நாட்கள் சென்றன. கொழும்பிலிருந்து வாங்கி வந்த பொருட்களுடன் யாழ்ப்பாணம் வந்துசேரும் வரை பட்ட வேதனைகள்தான் அதிகம். அங்கிருந்து தனது கிராமத்திற்குப் போய், தாயைக் கண்டதும் "அம்மா" என்றபடி கட்டியணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள் தர்சிகா.

விடயம்வரை தன் தமையனுடன் கதைத்தவற்றைச் சொல்லிக்கொண்டே இருந்தாள். தன்னையும் தாயையும், பாபு விரைவில் கூப்பிடுவதாகக் கூறியதைச் சொல்லிச் சந்தோசப்பட்டாள். அவள் கொண்ட சந்தோசம் வெளிநாட்டு வாழ்க்கையை எண்ணி அல்ல; ஏழு வருடங்களாகப் பிரிந்து வாழும் தமையனுடன் சேர்ந்து வாழ்வதை எண்ணியே களிப்புற்றாள்.

தர்சிகா கொண்டு வந்த பொருட்களை ஏனையோருக்கும் பகிர்ந்தளித்தாள் தனம் அக்கா. தனது பிரயாணத்தை ஒருகணம் நினைத்துப் பார்த்த தர்சிகாவின் கண்கள் இலேசாகக் கலங்கின.

எத்தனையோ இடங்களில் பொருட்களை இறக்குவதும், அதனைப் பிரித்துச் சோதனை செய்வதும்; இளைஞர்களும் இராணுவமும் ஒவ்வொரு குறிப்பிட்ட தூரங்களுக்கிடையில் தொடர்ச்சியான சோதனைகள்; சந்தேகப்பட்டால் இளைஞர்களும் இராணுவத்திலும் மேலாக மிருகத்தனமாகத் தாக்குவதும்; மரியாதை என்றால் பெரியவர்களிடமிருந்து சிறியவர்கள் கற்ற காலம் போய் தெருத்தெருவாக எவ்விரக்கமுமற்ற முறையில் வயதானவர்கள் மீது சிறுவர்களினால் தொடரப்படும் அராஜகங்களும் – இப்படி எத்தனை உயிராபத்தான தடைகள்?!

தமிழ்ப் பிரதேசங்களில் எமது தமிழ் இளைஞர்களின் கொடுமைகளும் சித்திரவதைகளும்; சிங்களப் பிரதேசத்திலோ இராணுவத்தின் கொடுமைகளும் அச்சுறுத்தல்களும். சுதந்திரம் வேண்டி சில இடங்கள் தமது கட்டுப்பாட்டில் எனத் தம்பட்டமடிக்கும் பகுதிகளிலோ — படித்த மக்களுக்கோ, கற்றறிந்த கலைஞர்களுக்கோ

பேச்சுவாக்கு சுதந்திரமில்லை. இப்படியான நிலைமைகளில் உண்மையை உண்மையென்று சொன்னால் கொலைகள் நீடிக்கின்றன. பொய்களைக் கூட உண்மையென்றோ, உண்மைகளைப் பொய் என்றாலோ அநாகரிகம் தலைதூக்குகின்றன. மனச்சாட்சிகளைத் தட்டி எழுப்பாமல், நித்திரைக் குளிகை போட்டுத் தூங்க வைக்க வேண்டிய எம்மில் பலருக்கு சுதந்திரம் எதற்கு என்பது புரியாத புதிராக உள்ளது.

தங்கிகாவின் எண்ணங்களின் வேதனைகளுக்கு முடிவு தெரியாமலிருந்தது.

'பணமுள்ளவனே கொழும்பிற்கோ அல்லது வெளிநாட்டிற்கோ போகிறான். ஒருநேர உணவிற்கே வழி இல்லாமல் பஞ்சத்துடனும் பட்டினியுடனும் உயிர் வாழ்வதற்காகப் போராடும் ஏழைகளால் எங்கே போக முடியும்?! வெளிநாட்டில் போய் உல்லாசமாக இருப்பதையும் பார்க்க, பாபு அனுப்பும் வெளிநாட்டுப் பணத்தின் மூலம் தினமும் துன்பங்களை அனுபவிக்கும் இந்த ஏழைகளுக்கு முடிந்தளவு உதவி, வாழ்வதே சிறந்தது. 'எமது மக்கள், எமது மக்கள்' என்று புலம்பிக்கொண்டு - அந்த மக்களின் சுய உணர்வினையோ, சுய தேவையையோ பூர்த்தி செய்ய முடியாத இளைஞர்களுக்கு ஏன் வீரம்பற்றிய கவலையும் நாட்டைப்பற்றிய சிந்தனையும் ?!

இப்படியே சிந்தனையில் ஆழ்ந்த தங்கிகா வெளிநாட்டுப் பிரயாணத்தைக் கைவிட்டு, தன்னை அண்டியுள்ள ஏழைகளுக்காக வாழத் தீர்மானித்தாள்.

இதயத்தில் நிறைந்திருக்கும் ஆசாபாசங்களை, கனவுகளை, கற்பனைகளைத் தள்ளி வைத்து விட்டு மரக்கட்டைபோல் வாழ முயற்சித்தாள். இப்படி எத்தனையோ தங்கிகாக்களின் இரவுகள் அர்த்தமில்லாத ஊமை இரவுகளாகக் கழிகின்றன.

இன்றைய நிலையில் பொறாமை உணர்வுகளும் பழியுணர்வுகளும் மேலோங்கியுள்ள எமது நாட்டில் ஏழைகளின் வாழ்க்கையில் ஒருபோதுமே வசந்தம் வரமாட்டாது. சாதியைத் தூய்மையாக ஏற்றுக் கொண்ட எம்மக்களின் உண்மையான யதார்த்தமான உணர்வுகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியது ஒவ்வொரு இளைஞர் சங்கங்களினதும் கடமை (?!).

ஏழைகளின் இதயத்தில்தான் இறைவன் இருக்கிறான்.

இறைவனை வணங்குவதையும் பார்க்க, ஏழைகளின் உணர்வுகளைப் புரிந்து கொள்வது நிச்சயம் பிரயோசனமானது.

அப்போதுதான் மலரும் புதிய சமுதாயம். அந்தப் புதிய சமுதாயத்திலிருந்து உருவாவதே உண்மையான சுதந்திரமாகும்.

[redacted]

# சிந்தித்தால் சிரிப்பு வரும்


* "ஆனந்திசாந்தி"



"ராஜேஷ்! என்ன செய்யுறாய்?"
"தம்பிக்கு கடிதம் எழுதுறேன்"
"உனக்குத்தான் எழுதத் தெரியாதே---?!"
"அவனுக்குத்தான் வாசிக்கத் தெரியாதே--!!"




நீதிமன்றத்தில் இரு சட்டத்தரணிகள் வாக்குவாதத்தின்போது அரசாங்க சட்டத்தரணி, பிரதிவாதியின் சட்டத்தரணியைப் பார்த்து, "உம்மைப் போல் ஒரு கழுதையை இங்கு நான் பார்த்ததேயில்லை" என்றார். உடனே நீதிபதி இருக்கிட்டு, "ஆர்டர், ஆர்டர். நான் ஒருவன் இங்கிருப்பதை மறந்துவிட்டீர்களா---?!" என்றார்.




"ஒரு விசயம். சொன்னால் சிரித்து வயிறு வெடித்துவிடும்."
"அப்படியென்டால் சொல்லாதையும்"
"சொல்லாவிட்டால் என்ரை தலை வெடித்துவிடுமே!"

ஒருவர்: முட்டைக்குள்ளிருந்து குஞ்சு வெளிவருகிறதே, இதை விடப் பெரிய அதிசயம் இயற்கையில் இல்லை.
மற்றவர்: ஆனால், குஞ்சு முட்டைக்குள் போய் பதுங்கிக் கொள்கிறதே! இதைவிடவும் பெரிய அதிசயம் உண்டா?!
ஒருவர்: ---?--?!

ஒருவர்:- கலியாணத்துக்குப் பிறகு ஆண்கள் தைரியசாலியாக வருகிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதே.
மற்றவர்:- அப்புறமா வந்து என்னாங்க பிரயோசனம்..?!


"என்ன ராஜு சௌக்கியமா? என்ன ஆளே மாறிப் போனாய் போலிருக்கே!"
"சேர்! நான் ராஜு இல்லேங்க. என்ரை பேர் சோமு."
"டேய்! ஆள்தான் மாறீட்டாய் என்டு பார்த்தா, பேருமா மாறிப் போச்சு."
"டேய், பாலுவை வரச் சொல்."
"என்னங்க ஐயா?"
"மணியடிச்சதும் வரவேணுமென்டு சொல்லியிருக்கிறேன் அல்லவா? ஏன் வரேலை?"
"எனக்குக் கேட்கவில்லை ஐயா."
"அதையாவது வந்து சொல்லக் கூடாதா?!"
"என்ன ஆச்சரியம்! ஒவ்வொரு செருப்பும் ஒவ்வொரு விதமாக இருக்கிறதே!"
"அதுதான் எனக்கும் புரியேலை. ஏனென்டால், இதேபோல இன்னொரு சோடிச் செருப்பு உன்ரை வீட்டிலை இருக்கே...?!"
"டாக்டர், இந்த ஆபரேஷனை நினைத்தால் பயமாக இருக்கு. நான் பிழைப்பேனா டாக்டர்?"
"அதுதான் எனக்கும் புரியேல்லை. என்னுடைய முதல் ஆபரேஷனும் இதுதான். எனக்கும் பயமாக இருக்காதா... என்ன?!"
நகைச்சுவை என்பது எமது கெட்ட சிந்தனைகளை இல்லாமல் செய்து நல்ல சிந்தனைகளை, எண்ணங்களை உருவாக்கி தினமும் கவலையுடன் வாழுகின்ற மனித மனங்களுக்காக அச் சிந்தனைகளை, எண்ணங்களை ஒருமுகப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட நற்சிந்தனைகளே.
- ஆனந்தி சாந்தி -

# முத்தாரம்

குறுக்கெழுத்துப் போட்டி இல. 3ல் 2→18 இடம்பி என்று எழுதியிருக்கிறீர்கள். அது 2→22 என எண்ணி விடை எழுதியிருக்கிறோம். இனிமேல் குறுக்கெழுத்துப் போட்டி எண்களைச் சரியாக எழுதுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

— திருமதி. ச. யோகேஸ்வரன்,
8500 NURNBERG. 40.

கவனையீனப் பிழைக்கு வருந்துகிறோம். — சுழியோடிகள்.

• • • • •

வணக்கம். சஞ்சிகை கிடைத்தது. நன்றி. பொய்மையைப் பொய்யென்றும், உண்மையை உண்மையென்றும் எழுதுவதற்கு சகல விதத்திலும் உரிமைகள் வழங்கிய கடல் ஆசிரியர்களுக்கு மிகவும் நன்றி.

எமது பிரதேசத்தில் இருந்து மக்களுக்கு உதவி செய்வதாகக் கூறிக் கொண்டு பதவிக்காக, மனித வேட்டையாடிக் கொண்டு, மனித இரத்தத்தை உறிஞ்சி வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து ஒட்டுண்ணிகளையும் எமது தமிழ்ச் சமுதாயத்திலிருந்து தூக்கியெறிய 'கடல்' ஒரு தளமாக மாறி ஒத்துழைப்புத் தருமென்று நம்புகிறேன்.

—இரா. சிவாநந்தன்,
5012 BEDBURG.

'கடல்' சஞ்சிகையில் 'மழலைப்பட்டாளம்' வரவேற்கத்தக்கது. அத்துடன் சிறுவர்களுக்கு ஊக்கமூட்டக் கூடிய சிறிய போட்டிகள் சேர்க்கப்பட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும். 'கடல்' நீண்ட காலம் தொடர்ந்து சிறப்புடன் வெளிவர எங்கள் வாழ்த்துக்கள்.

— த. தியாகராசா,
5880 LUDENSCHED

• • • • •

கடலே, நீ வெண் சங்கை ஊதிடுவாய். மேகத் திரையினையே முத்தமிடும் மாகடலே. கோலக் குமுறலிலே நீ கொந்தளிக்கலாகாது. நீலக் கடலதிலே நீந்திவரும் மீனினமே. காலச் சுழலிலே நீ கரைந்திடுதல் ஆகாது. நாடு செழிப்புறவே நல்வளங்கள் நீ தருவாய். நம் மக்கள் விழிப்புறவே வெண்சங்கை ஊதிடுவாய்.

— திருமதி. க. இருளம்பிள்ளை,
3203 SARSTEDT.

• • • •

சுழியோடியே என்ன உன் முகத்தில் சோகரேகை?! வாசகர்கள் வதைபடுகிறார்களா? உண்மையைச் சொன்னால் உதைக்க வருகிறார்களா? அடிக்க அடிக்கத்தானே மேளத்திலிருந்து நாதம் பிறக்கிறது. எரிக்க எரிக்கத்தானே பொன் ஒளி வீசுகின்றது.

பட்டுக் கொண்டு பேசாமல் இருந்து விட்டால், நாளடைவில் பலதரப்பட்ட சிக்கல்கள் வந்துவிடும். குணப்படுத்துவதும் அவ்வளவு எளிதல்ல. ஆகையால், இந்த மாதிரி நேரங்களில் செலவையும் சிரமத்தையும் பார்க்கக் கூடாது.

எந்தப் பெண்ணுக்கும் முதல் குழந்தை பிறந்ததும் அச்சமும் ஆவலும் ஏற்படும். குழந்தைக்குப் பசி எடுக்கிறதா இல்லையா என்று எப்படித் தெரிந்து கொள்வது, குழந்தைக்கு பால் கொடுக்கும்போது எவ்வளவு தர வேண்டும், எப்படிக் குழந்தையைக் குளிப்பாட்டுவது, எப்படி அதை தூக்குவது என்று தெரியாமல் விழிப்பார்கள். இத்துடன், வீட்டு வேலைகளையும் செய்ய வேண்டுமே என்ற கவலை வேறு வந்துவிடும்.

குழந்தையைப்பற்றி இந்த அளவுக்குத் துன்பம் கொள்ளத் தேவையில்லை. புதிய குழந்தை எந்தத் தொல்லையும் கொடுப்பதில்லை. குழந்தைக்கு முதலில் தேவைப்படுவது தாயின் அன்புதான். பசி எடுக்கிறதோ இல்லையோ, பால் கொடுத்தது போதுமா, எப்படிக் குழந்தையை தூக்குவது என்பனவெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னால் தெரிந்துவிடும்.

பிறந்த குழந்தையை வீட்டுக்கு அழைத்து வரும்போது, குடும்பத்தில் அந்தக் குழந்தை இணைந்து விடுகிறது. வீட்டின் சுற்றுப்புறம் எப்போதும் போல இருக்க வேண்டும். குழந்தை விழித்துக் கொள்ளுமோ என்று சத்தமில்லாமல் நகர்வதும், வீட்டு வேலைகளைச் செய்யாமல் இருப்பதும் தேவையற்றது. முடிந்த வரையில் ஓசை மிகுதியாக இல்லாமல் பார்த்துக் கொண்டால் போதுமானது.

மனைவி எப்போதும் குழந்தையையே கவனித்துக் கொண்டிருப்பதும், குழந்தையிடமே மிகுந்த அன்பு செலுத்துவதும், புதிய தந்தைக்குத் துன்பத்தை விளைவிக்கும். கணவன் தானும் குழந்தையைக் கவனித்துக் கொள்ள உதவ வேண்டும் என்று எண்ணுவதால் ஏற்படும் துன்பம் இது. இதைப் பெண்கள் புரிந்து கொண்டு, கணவனின் உதவியைப் பெற வேண்டும். மனைவி சாப்பிடும் போதோ, குளிக்கும்போதோ, வீட்டு வேலைகளைச் செய்யும்போதோ கணவனிடம் குழந்தையைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்ல வேண்டும். பாசம் ஏற்படுவதற்கு இதுவும் ஒருவழி.

குழந்தைக்குப் போத்தல் பால் கொடுப்பதும், குழந்தையின் உடைகளை மாற்றுவதும் கணவனுக்கு மகிழ்ச்சி தரும் வேலைகள்.

ஒரு குடும்பத்தில் ஐந்து வயதுக்கும் குறைவான பிள்ளைகள் இருந்தால், அவை புதிதாக வரும் பிள்ளைகளை வரவேற்பதில்லை. அந்தப் பிள்ளைகளைக் குறை கூறுவதால் பயனில்லை. இதற்கு முன் ஒரே பிள்ளையிருந்து தாயின் முழு அன்பும் அதற்குக் கிடைத்து வந்திருந்ததால், இப்போது புதிய குழந்தை வந்ததும் அந்தப் பிள்ளைக்கு மிகவும் பொறாமை ஏற்படும். இப்போது தாயின் அன்பு பெரும்பாலும் புதிதாக வந்துள்ள குழந்தை

ின் மீதே செலுத்தப்படுவதைக்
ண்டு முதல் பிள்ளை மகிழ்ச்சி
ல்லாமல் இருக்கும்.

இப்படிப்பட்ட ஒரு சங்கடமான நி
லைமையை மாற்ற முடியும். குழந்தை
றப்பதற்கு முன்பே, முதல் பிள்ளை
டம் வீட்டில் ஒரு புதுக் குழந்தை
ரப் போவதாக அடிக்கடி தாய்
ற வேண்டும். புதிதாக வரும்
ழந்தை எல்லோருக்கும் சொந்த
ானது. அது தாய்க்கு மட்டும்
ொந்தமானது என்று யாரும் என்
னக் கூடாது என்றும் அடிக்கடி
ொல்ல வேண்டும். வரப்போவது
ம்பி என்றும் தங்கை என்றும்
ாசத்தை ஊட்ட வேண்டும்.

தாயுடன் படுத்து உறங்கும் பழ
கம் கொண்ட முதல் பிள்ளையை
ழந்தை பிறப்பதற்கு முன்பே வே
அறையில் படுக்க வைத்துப்
ழக்க வேண்டும். குழந்தை பிற
ந்து வீட்டுக்கு வந்த பிறகு முதல்
ிள்ளையை வேறு அறையில்
டுக்க வைத்தால், அந்தப் பிள்
ளைக்கு ஏமாற்றமாகவும் துன்ப
ாகவும் இருக்கும்.

தாய் குழந்தைக்குப் பால் தரு
போதும், குளிப்பாட்டும்போதும்,
ளவுக்கு மேல் அன்பைச் செலுத்
ிச் சீராட்டி வளர்க்கும் போதும்
தல் பிள்ளைகள் கவனித்துக்
கொண்டே இருக்கும். தாயின் அ
ன்பு பகிர்ந்து போய்விட்டதே என்ற
ன்ற ஏக்கம் முதல் பிள்ளைகளு
க்கு ஏற்படும். இந்த நிலையில்,
தாய் குழந்தையைக் குளிப்பாட்டிப்
பவுடர் போடும்போது மூத்த பிள்
ளையும் தானும் குளிக்க வேண்
டும் என்று பிடிவாதம் பிடிக்கும்.
அப்போது தாய் அந்தப் பிள்ளை
யைக் கடிந்து கொள்ளக் கூடாது.
குளிப்பாட்டி அந்தப் பிள்ளைகளு
க்கும் பவுடர் போட வேண்டும்.

போத்தலிலிருந்து குழந்தைக்குப்
பாலை ஊட்டும்போது, மூத்த பிள்
ளையும் தனக்குப் போத்தலில்
பால் வேண்டும் என்று ஒற்றைக்
காலில் நிற்கும். அப்போதும் தாய்
கொஞ்சம் விட்டுக் கொடுக்க வே
ண்டும். போத்தலில் உள்ள பாலை
அந்தப் பிள்ளைக்கும் கொஞ்சம்
கொடுத்துவிட்டு, அது பால் குடிக்
கும்போது, தானே பாலை 'கப்'பில்
பருகும் அளவுக்கு அந்தப் பிள்ளை
வளர்ந்துவிட்டதாக அடிக்கடி அ
ன்புடன் கூற வேண்டும். ஒன்றி
ரண்டு கிழமைகளில் மூத்த பிள்
ளைகளின் பிடிவாதம் அடங்கி
விடும்.

குழந்தையின் போர்வையைப் பிடு
ங்குவதும், குழந்தையை அடித்து
விடுவதும் கிள்ளுவதும், அதன்
கையையோ காலையோ இழுப்ப
தும் மற்றப் பிள்ளைகளுக்குப் பொ
துவான விளையாட்டு. குழந்தை
யிடம் உள்ள ஆசையைக் காட்
டவே இப்படிச் செய்கின்றன. அ
ப்போது தாய் அந்தப் பிள்ளைகளிட
ம் நல்லபடியாகப் பேசி அவர்களி
டம் அது அன்பைச் செலுத்துவதா
கவும், குழந்தையை அடிப்பதோ
துன்புறுத்துவதோ கூடாது என்று
ம் என்றும் சொல்ல வேண்டும்.

வளரும்.....

குறுக்கெழுத்துப்போட்டி முடிவுகளும்
[இல.3] சரியாக விடை அனுப்பியோரும்

| | | | | |
|---|---|---|---|---|
| அ 1 | வ 2 | மா 3 | ண 4 | ம் 5 |
| ர 6 | ப | த | ம் 9 | த |
| ங் 11 | கு | ம் 13 | கு | ம 15 |
| கே 16 | க் 17 | ப 18 | ச 19 | ம் |
| ந | ம் 22 | ம் 23 | வ 24 | ச 25 |
| ந | வை 27 | ப | வ | ம் 30 |
| ம் 31 | ய | ர | ம் 34 | த |
| கா 36 | க 37 | ம் 38 | தி 39 | ரு 40 |

1. திருமதி. அமுதா புலேந்திரன்,
4006 ERKRATH.2.

2. திரு. இரா. சிவரஞ்சன்,
5012 BEDBURG.

3. செல்வி. ஸ்ரீ கௌரி கிருஸ்ணபிள்ளை,
3203 SARSTEDT.

4. திரு. S. சொலொமன்,
7144 ASPERG.

5. திருமதி. சஸிகலா பாஷிர்,
5166 KREUZAU.2.

6. திரு. G. கஜேந்திரன்,
4100 DUISBURG.28.

7. திருமதி. சத்தியதேவி கேதீஸ்வரன்,
8500 NÜRNBURG.40.

8. செல்வன். K. வினோத்,
4150 KREFELD.1.

9. திருமதி. காந்திமதி மயில்வாகனம்,
6639 SIERSBURG.

10. திருமதி. புனிதமலர் இராஜேஸ்வரன்,
5013 ELSDORF/RHLD.

*பரிசு பெறும் அதிஸ்டசாலி*
*செல்வன். K. வினோத்,*
*4150 KREFELD.1*
*இவருக்கு எமது வாழ்த்துக்கள்.*

அடுத்த இதழில் இருந்து---
வாசகர்கள் தயாரித்து அனுப்பிய
குறுக்கெழுத்துப் போட்டிகள் தொடர்ந்து
வெளிவரும்.
தொடர்ந்தும் வாசகர்கள் குறுக்கெழுத்துப்
போட்டி தயாரித்து அனுப்பலாம்.

[சென்ற இதழ் தொடர்ச்சி---]

எதற்கும் அவன் மூலமாக விசாரித்துப் பார்ப்போம் என நினைத்துக் கொண்டு, அவனுக்குப் போன் பண்ணி விபரத்தைச் சொன்னான். அவனும் நாளை மாலைக்குள் விசாரித்துப் போன் பண்ணுவதாகக் கூறினான்.

பலருடைய காதல் கதைகளைக் கேட்டு பிரசன்னா சிரித்திருக்கிறான். சிலபேர் தாடி வளர்த்துக் கொண்டு காதலில் தோல்வி என்று பறைசாற்றித் திரிவதையும் மதுவுக்கு அடிமையாகி, 'நாசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு காத்தாடி போலாடுது' என்று பாடிக் கொண்டு திரிவோரைப் பார்த்து ஆறுதல் சொல்லி, 'நீங்கள் ஏன் வேறு கலியாணம் செய்யக் கூடாது?' என்று கேட்டிருக்கிறான். ஆனால் காதலால் ஏற்படும் பிரிவின் வேதனை எவ்வளவு கொடுமையானது என்பதை தற்போதுதான் அவனால் உணர முடிகிறது.

பலதையும் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது டெலிபோன் மணி ஒலித்தது.

நண்பன் அரவிந்தன்தான்.

"பிரசன்னா, நீ விசாரித்த பிள்ளை என்னுடைய தங்கையின் சிநேகிதப் பிள்ளைதான். இரண்டு மூன்று கிழமைக்கு முன் விடுமுறைக்காக அங்கு வந்தபோது அந்தப் பிள்ளையின் தம்பியின் அங்குள்ள நண்பர் யாரோ புதிதாக லைசென்ஸ் எடுத்தவராம்... வலது கை ஓட்டமுள்ள கார் ஓட ஆசையாக இருக்கிறது என இவர்களையும் ஏற்றிக்கொ

ண்டு போகும்போது கார் விபத்துக்குள்ளாகி அந்தப் பிள்ளையின் தம்பியும், கார் ஓட்டியவரும் ஸ்தலத்திலேயே மரணமாகிவிட்டார்கள். அந்தப் பிள்ளைமட்டும் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டாள். ஆனால் அவளுக்கு ஒருகால் எடுக்க வேண்டி ஏற்பட்டுவிட்டதாம்! அங்கிருக்கும் உனக்கு இந்தச் செய்தி தெரியாதா? பத்திரிகைகளில் வந்திருக்குமே?!"

ஏதேதோ அரவிந்தன் கேட்டான். எதுவுமே காதில் விழவில்லை.

பிரசன்னாவால் எதையும் ஜீரணிக்க முடியவில்லை. என்ன வாழ்க்கை? காதல் என்றாலே ஏதாவது ஒரு பிரச்சனை இருக்கத்தான் செய்யுமா?

எதற்கும் கீர்த்தனாவோடு கதைக்க வேண்டும்.

டெலிபோனை எடுத்து 'டயல்' பண்ணினான். மறுமுனையில், "ஹலோ. பிரகாஷ்..." எனப் பதில் வந்தது. பிரசன்னாவும் அடக்கமாக, "நான் பிரசன்னா. ஜேர்மனியில் இருந்து கதைக்கிறேன். கீர்த்தனாவோடு கதைக்க முடியுமா?" எனக் கேட்டான்.

"ஒரு நிமிடம்..." என்று சொல்லி, 'யாரோ பிரசன்னாவாம். ஜேர்மனியிலிருந்து கோல்' என்றவாறு கீர்த்தனாவிடம் ரெலிபோனைக் கொடுத்தான்.

பிரசன்னாவிற்கு எப்படிக் கதைப்பது என்று புரியவில்லை.

"கீர்த்தனா! இன்றுதான் நான் எல்லா விடயமும் கேள்விப்பட்டேன். எப்படி உங்களுக்கு ஆறுதல் சொல்வது என்றே புரியவில்லை" என்றுவிட்டு மௌனமானான்.

கீர்த்தனாவும் கொஞ்சநேரம் மௌனமாக இருந்துவிட்டுச் சோகம் கலந்த குரலில்,
"எனது கால் போனதையிட்டு நான் சிறிதளவும் கவலைப்படவில்லை. எனது தம்பியின் பிரிவைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வாழ்க்கையே சூனியமாக இருக்கிறது. என்னால் அதிகம் கதைக்க முடியவில்லை. தயவு செய்து இனிமேல் போன் பண்ண வேண்டாம்" என்று சொல்லி போனை வைத்துவிட்டாள்.

போன் பண்ண வேண்டாம் என்று சொன்னால் என்ன அர்த்தம்?! தன்னை மறந்துவிடும்படி மறைமுகமாகச் சொல்லுகிறாளா? பெண்களுக்கு மிகவும் இரக்க சுபாபம் என்பது உண்மையோ எனக் சந்தேகமாக உள்ளது. எவளவு சுலபமாக இனிமேல் போன் பண்ண வேண்டாம் என்று சொல்லி போனை வைத்துவிட்டாள்.

காதலும் கத்தரிக்காயும் என்று சிலபேர் கேலிபண்ணுவார்களே அதற்கு இப்போதுதான் அர்த்தம் புரிகிறது. அழகான கத்தரிக்காய்க்குள் புழு துளைத்திருப்பதுபோல் காதலும் ஆரம்பத்தில் நன்றாக இருந்து, நிறைவேறாத போது புழு அரித்ததுபோல் இருக்குமோ? எதுவுமே புரியவில்லைப் பிரசன்னாவிற்கு. எது எப்படியிருந்தாலும் கீர்த்தனாவிற்கு மன ஆறுதல் தேவை. அதற்குக் கொஞ்சக் காலம் தேவை. அதுவரை பொறுத்திருப்போம் என

...ன்னைத்தானே தேற்றிக் கொண்டு
...க்கைக்குப் போய்விட்டான்.

ரெலிபோன் மணி ஒலித்தது. நிமி
...த்து நேரத்தைப் பார்த்தான். மணி
...ாலை 4.30. கீர்த்தனாதான் எ
...ச் சந்தோசத்துடன் போனை எடு
...தான். அண்ணன் அகிலன்...!
...லநாட்களாக ரெலிபோன் தொ
...ர்போ கடிதத் தொடர்போ இல்லா
...ல் இருந்தவர், திடீரென்று காலை
...வேளையில் போன் பண்ணி,
...பிரசன்னா, அடுத்த கிழமை நா
...கள் ஜேர்மனிக்கு வருகிறோம்.
...னிக் கிழமை காலை 10.30க்கு
...rankfurt Airport'ல் Receive
...ண்ணவும்" என்று சொல்லி வைத்து
...விட்டார்.

அண்ணனுக்கு என்ன நடந்தது
...திடீரென்று தம்பிமேல் பாசம் பொத்
...க்கொண்டு வந்துவிட்டது?! இந்
...த வருட லீவு முழுக்க எடுத்தாகிவி
...ட்டது. அவர்கள் வந்தால் எப்படியும்
...இரண்டு கிழமையாவது இங்கு
...தங்குவார்கள். லீவும் எடுக்க முடி
...யாது. எதற்கும் வந்த பின் டாக்ட
...ரிடம் மருந்து துண்டு வாங்கிக்
...கொடுக்க வேண்டியதுதான்!

...காலச் சக்கரம் ஏனோ விரைவா
...க் சுழல்வது போலிருந்தது. அண்
...ணன் அகிலன் வரும் நாளும் வந்
...தது. பிரசன்னா, அவர்களை வர
...வேற்பதற்கு விமானநிலையத்தில்
...காத்திருந்தான். அண்ணன் அகிலன்,
...மனைவி, மகன் இளங்கோ கூடவே
...ரு இளங்குயிலும் வந்து கொண்
...டிருந்தது. யாராக இருக்கும்?!
...லவேளை விமானச் சிநேகமாக
...இருக்கலாம்.

அண்ணன் அருகில் வந்ததும்
கட்டியணைத்துக் கன்னத்தில் முத்
தமிட்டார். பிரசன்னாவிற்கு இளா
ங்கோவைப் பார்க்க ஆச்சரியமாக
இருந்தது. அவனோடு தூக்கி உச்
சிமோர்ந்தான். இன்னும் அந்த இ
ளம்பெண் அருகிலேயே நின்று
பாசப் பரிமாற்றங்களைப் பார்த்து
க்கொண்டு நின்றாள். அண்ணன்
அவளை அறிமுகப்படுத்தினார்.

"இவள் பெயர் கீர்த்தனா. எனது
குடும்ப நண்பர் பாலனின் ஒரே
மகள்..."

— தொடரும்....

ஒருவர் :- என்ன... டொமினிக் நேற்று ஆஸ்ப
த்திரியாலை வந்ததும் மயங்கி
விட்டானாமே.

மற்றவர்:- வீட்டிற்கு வந்ததும் டாக்டரின்
'பில்'லைப் பார்த்திருப்பான்.

- ஆனந்திகாந்தி -

# அதிமேதாவியின் அவசரக்குறிப்புகள்

— (இ)ராமசாமி —

இந்திய மக்களின் அனுதாபம் எங்கள் பக்கம் இருந்தால்தான் அது இந்திய அரசியல்வாதிகளை யும் எங்களுக்காகப் பேச வைக்கும். இந்திய மக்கள் கொண்டிருந்த அனுதாபம்தான் இந்த மாநில, மத்திய அரசுகளை இவ்வளவாவது தமிழ் மக்கள் பற்றிப் பேச வைத்தது. அதை விடுத்து சில முட்டாள் தனமான மனிதர்களின் செயல்பாட்டால் இந்திய அரசின் எதிர்ப்பையும், மக்களின் எதிர்ப்பையும் சம்பாதிப்பதும், இந்தியாவின் ஸ்திரத்தன்மையைக் குழப்புவதும், வெளிச் சக்திகளின் ஊடுருவலுக்கும் இலங்கை அரசின் தான்தோன்றித்தனமான போக்குக்கும்தான் வழிவகுக்கும். இவ்வாறான செய்பாடுகள் ஏற்கெனவே கழுத்துவரை புதையுண்டு கிடக்கும் தமிழினத்தின் மேல் மேலும் சேறுவாரிக் கொட்டும் முயற்சியே அன்றி ஒரு பொறுப்புள்ள, மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களின் செயல் அல்ல.

— தாயகம் —

ராஜீவ் தலைமையால் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் பதில் தேடுவது தவறல்ல. இப்படியான கொலைதான் பிரச்னைக்கு ஒரே தீர்வு என்றில்லா விடினும் ராஜீவின் கொலைக்குப் பின்னணியில் ஏகாதிபத்தியங்கள் இருப்பதாகவே ஊகிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ராஜீவ் கொலை செய்யப்பட்டதை வைத்து ஈழத் தமிழர்களுக்குக் கிடைக்கும் இந்திய மக்களின் தார்மீக ஆதரவை இல்லாமல் செய்வதிலேயே இந்திய வோட்டுக் கட்சிகள் முயற்சித்து வருகின்றன. இது ஈழத்தமிழருக்கு ஓரளவு பாதகமான அம்சமே.

எனினும் ராஜீவின் கொலைக்கு சீக்கிய மக்களோ, அஸாம் மக்களோ, காஷ்மீர் மக்களோ, நேபாள மக்களோ, ஈழத் தமிழ் மக்களோ இன்னும் ராஜீவின் அரசியலால் பாதிக்கப்பட்ட மக்களோ கவலைப்படப் போவதில்லை.

— தாண்டில் —

இருண்ட தேசத்தில்
இடியின் தொடர்ச்சியாய்
இனங்களிடையே
உறவை இழந்தோம்
இந்திய சோதரர்
உறவும் - - - -

எம்மை விட்டு
உயரமானவரேன்
இன்று இக் கொலைக்கு யாருமே
ரிமை கோராத நிலையில் அல்
து தெரியவராத நிலையில் இப்ப
புலிகள்மீது வீழ்ந்துள்ளதால்,
ழப் போராட்டத்துக்கான தமிழக
க்களின் தார்மீக ஆதரவை இழ
திப்பதற்கான வாய்ப்பு உள்ளது.
வும் சர்வதேச தொலைத்தொட
சாதனங்களின் பிரச்சார நடவ
க்கைகள் ராஜீவ் ஒரு ஜனநா
கவாதியாகவும் இந்தியா ஒரு
கப் பெரும் ஜனநாயக நாடு என
ம், புலிகள்தான் இக்கொலை
யச் செய்தது போலவும் அமைந்
ள்ளன. இதுவும் சர்வதேச ரீதி
ல் தமிழ் மக்களின் போராட்டத்
க்கான தார்மீக ஆதரவைப் பாதி
ப்பே செய்கிறது.

— மனிதம் —

ராஜீவ் காந்தி கொலையின்
ன்னர் தாயகம் பத்திரிகையின
ம்; தூண்டில், மனிதம் சஞ்சிகை
ளினதும் ஆசிரியர் தலையங்க
ங்களின் சில முக்கிய பகுதிகள்
மலே குறிப்பிடப்பட்டுள்ளன. ஜன
ாயக விரும்பிகள் மத்தியில் வர
வேற்கப்படும், இவற்றின் கருத்
துக்களான ஏடு இட்டோர் இயக்க
அவ்வளவு இலகுவில் அலட்
சியப்படுத்தக் கூடியவை அல்ல.
வாழ்விற்கும், சாவிற்கும் இடை
யில் ஊசலாடும் ஈழத்தமிழர்களி
ன் நிரந்தரமற்ற இருப்புக்களை
யும் தகர்ப்பதற்கு உதவியா
ய்போன இக்கொலையின் வரு
ன பாதிப்புகளை இவற்றில்
சில தெளிவாக்குகின்றன.

இந்திய அரசின் ஆலோசனையி
ன் பேரில் இயக்கங்கள் அனைத்
தும் ஆயுதப் பயிற்சி எடுத்ததும்,
இந்தியாவைப் பின் தளமாகக்
கொண்டதும் பழைய விடயங்கள்.
அங்கேயிருந்துகொண்டே எந்தவி
த சந்தேகமுமில்லாது வங்கம்
தந்த பாடம் எழுதியவர்களும், யூஸ்
குடிப்பதைப்போல இந்தியாவை
'யூஸ்' பண்ணுவோம் எனச் சொ
ன்னவர்களும், இந்திய அரசின்
சுயரூபம் தெரிந்தும்கூட இந்த
அடிதடி இயக்கங்களின் ஆதர
வாளர்களாக வெளிநாடுகளில்
கார்களில் குடித் திரிந்து கவலை
ப்பட்டவர்களும், யுகப் புரட்சி வெ
டிக்கப் போகுதென்று காத்திருந்த
வர்களுமாக--- எல்லாம் கதை
யாச்--- பெருங்கதையாய்----

இந்தியா, இயக்கங்களுக்கு தங்
குவதற்கு இடமும் கொடுத்து; ஏ
தோ ஈழம் பிரிய வேண்டும், செ
ந்தமிழர் தங்களுக்குள்ள சுடுபட்டுச்
சாக வேண்டும் என்பதற்காக
அல்ல. தனது மேலாதிக்கத்தை இ
லங்கை மீது பிரயோகிக்க; இயக்
கங்களை, அரசை அடிபணிய
வைக்கும் ஒரு கருவியாகப் பயன்
படுத்துவதற்காகத்தான் இந்த
கொடை வள்ளல்தனங்கள். ஒரு
வல்லரசின் தேவையும் விருப்பமும்
கூட இதுதான். இதை விடுத்து
உலகத்தில் இல்லாத ஒரு புரட்சி
ஈழத்தில் நடந்தது; நடக்கிறது என்
றும், அதை இந்தியா நசுக்கியது
எனவும் சொல்பவர்கள் பலதைத்
தெரிந்து கொள்ள மறந்தவர்கள்.

இந்திய அரசைப் புரிந்திருந்தும் கூட இயக்கங்கள் ஏன் இந்தியாவைப் பின்தளமாகக் கொண்டன. மாறி மாறி அரசினதும், ரோவினதும் ஆதரவாளர்களாக ஏன் மாற்றம் பெற்றன. இதற்குள்ளேயும் மாக்ஸிஸ, லெனினிச, மாவோ சிந்தனை இன்னும் ஸ்டாலினிச என்ற பெயருடனும் (பெயருக்கு மட்டுமா என்ன) இருக்கின்ற நக்ஸலைட்டுகளுடன் தொடர்பு வைத்து, தங்களுக்குள்ளேயே ஒற்றுமையில்லாத உண்மையான புரட்சிகர சக்திகள் என வெளிக் காட்டிக் கொண்ட இயக்கங்களும் உண்டு.

சரி, நடந்தவை எல்லாவற்றையும் மறந்து விடுவோம். ஒரேயொரு இயக்கம் ஈழத்தில் இருந்து', ஜனநாயக மத்தியத்துவமும் தழைத்தோங்கி, இந்தியாவிற்குச் செல்லாமல் தளத்திலேயே பயிற்சியும் எடுத்து; நாங்களும் நாட்டுப் பற்றோடு களத்தில் நின்று; தமிழ் ஈழத்துக்கு வேலி போடுகின்ற கட்டத்தில் இந்தியா என்ன செய்திருக்கும்?

இலங்கை அரசுக்கு உதவியாக வந்து போர் ஆட்டத்தை முழுமையாக நசுக்கியிருக்கும்.

எமது பிரச்சனையில் இந்தியா எவ்வாறு அணுகும் என்பதைத் தெரிந்திருந்தும் கூட, நடந்து முடிந்தவைகளுக்கு நியாயம் கற்பிக்க முயல்வது மிகவும் அவசரமான ஆழமற்ற பார்வையே. எந்த விடயத்திலும் இந்தியா தனது நலன்களைத்தான் காக்குமே தவிர எங்கள் மீது நியாயமான அனுதாபம் காட்டும் என்பது எங்களை ஏமாற்றிக் கொள்ளும் முயற்சி என்ற அப்பட்டமான உண்மை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஏகாதிபத்தியங்களை எதிர்க்கின்ற கண் மூடித்தனமான புலுடுவாதங்கள் யாருக்கும் நன்மை தராது.

எங்கள் விடயங்களில் இந்தியா எங்களைப் பாவித்து தனது நலனைக் காத்துக் கொள்ள நினைத்தால், அந்த விடயத்தில் நாங்கள் புத்தி சாதுரியமாக நடந்து கொள்ள வேண்டுமேயன்றி; முட்டாள்தனமாகி, எங்களுக்குள்ளேயே முட்டிமோதி போருக்குள் வாழ்ந்த சின்னஞ் சிறியவர், பெரியவர் எல்லோரையும் சன்னங்களால் துளைத்து, தவித்துப்போய் இயலாத கட்டத்தில் பயங்கரவாதத்தின் உயர்ந்த மட்டங்களில் ஜோனர் சேவை செய்யப்பட்ட அறியாத உயிர்களின் உடம்புகளில் குண்டுகளைக் கட்டிவிட்டு கொலை விழா பார்க்க வேண்டுமென்று அல்ல.

இந்தக் கொலையினால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் தென்னிந்திய முகாம்களில் உள்ள எம்மினத்தவரே. மன்னாரினூடாக மண்டபம் முகாமிற்கு வருகை தொடங்கிய ஆரம்ப நாட்களிலே, இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் போவதாக அதிகாரிகள் பயமுறுத்தியபோது, எம்மினப் பெண்கள் பலர் "எங்களை இந்தக் கடலிலேயே கொன்றுபோட்டுப் போடுங்கோ! ஆனால் நாட்டுக்குத் திருப்பி அனுப்பிப் போடாதேங்கோ" எனக் கெஞ்சியழுததைப் பலர் அறிந்திருக்கக் கூடும். ஏனெனில் அவர்கள் பிரச்சனை உயிர் தும்ப

ந்மானது. ஆனால், இப்போது அவர்க
ளைத் திருப்பி அனுப்பப் போவதாகச்
ய்திகள் கூறுகின்றன. புதிய முதல
மைச்சரிடம் ஏதாவது மாற்றம் ஏற்படின்
ந்த அகதிகள் ஓரளவு அமைதி பெ
லாம். மறுபுறத்தே முகாம்களில் நிர்
ாகச் சீர்கேடு, பொலிஸ் உதவியுடன்
றுப்புக்கள் (சிறுநீரகம் போன்றவை)
ாள்ளை, தொடர்ந்து கொண்டுதா
இருக்கின்றன. பாதிக்கப்படுபவர்க
ளை, பரிதாபத்துக்குரியவர்களாகப்
ர்ப்பதற்குமட்டும்தான் வெளியுலகம்
பற்சிக்கும்.

இனியென்ன ?! எல்லாம் நடந்து
டிந்துவிட்டன. கொழும்புப் பக்கமும்
ண்டுகள் வைத்துக் கொண்டிருக்
கின்றன. இங்கேயோ திருப்பி அனு
ப் போகின்ற பயமுறுத்தல்கள். எ
றாயினும் இன்றும் கூட நீண்ட பார்
வையற்று, இனத்தின்மீது நியாயமா
பிடிப்பு அற்று கனவிலும் நினை
க்காத ஒரு புரட்சி வரவேண்டும்
ன எதிர்பார்ப்பது சிலருக்கு தொடர்
ந்தும் உரிமையாகின்றது போலும்.
படிக்கைகள் சந்தோசமானவைதா
ன!

• •    • •    • •    • •

ஜெயகாந்தனின் கதையைத்தான்
படிப்பேன் என்பவரும்; அசோகமித்தி
ரன் அந்தமாதிரி எழுதுவார் என்று
சொல்பவரும்; தி. ஜானகிராமனின்,
புதுமைப்பித்தனின் ஆக்கங்கள்
சிறந்தவை என அடித்துக் கொள்
பவர்களும்; வர்ணனை என்றால்
லா.ச.ரா.வும் அகிலனும்தான் உன்ன
ம் எனக் கூறுபவரும்; இன்னும்
சிலர் எழுத்துக்கு யம், காதல் கதை
க்கு யார், துப்பறியும் மர்மத்துக்கு
யார் யார் எனப் புட்டுப் புட்டு வைப்
பவரும்; எமது சமூகத்திற்குள் மிக
வும் அதிகம். கதை கேட்டுக் கதை
கேட்டு வளர்ந்த சமூகம் என்ற
உண்மை மறுக்கப்பட்டாலும் கூட.

சிவாஜியின் நடிப்புக்குக் கண்கல
ங்கி, எம்.ஜி.ஆரின் சண்டைக்கு
விசிலடித்து, நாகேஷின் நகைச்
சுவையில் வயிறு குலுங்கியவர்கள்
தானே நாங்கள். சினிமாவின் வருட
வளர்ச்சியும், எமது அபிமான நடிக
ர்களும் மாறிப் போனாலும் இன்று
ம் அதே நிலைமைதானே.

எந்தச் சூழ்நிலைகளிலும் எமது
சமூகத்திற்குள் படித்தவர்கள் அதாவது
புத்திஜீவிகள் என்று அழகாக உச்சரி
க்கப்படுபவர்கள் தம்மை வித்தியாச
மாகக் காட்டிக் கொள்ளவே முனை
ந்திருக்கிறார்கள். அவர்கள்தான்
கூடுதலாக, இலக்கிய விசிறிகளா
கவும் தங்களைக் காட்டிக் கொண்
டவர்கள். சினிமாவிலும் கூட;
எஸ்.பி. முத்துராமனின் படம் அ
ருமையானது எனச் சொல்லிவிட்
டால்; இந்த மகானவினால் சமூக
த்துக்கு என்ன நன்மை?! பாலச்சந்
தரின் அந்தப் படம் எவ்வளவு புரட்
சிகரக் கருத்துகளையுடையது என
வாதாடும் தன்மையும் கொண்டவ
ர்கள். ஆனால் நிஜ வாழ்வில் பா
லச்சந்தருக்கும், புரட்சிக்கும் எவ்வ
ளவு கிலோ மீற்றர் இடைவெளி
என்பதை அவர்கள் அறிய விரு
ம்புவதில்லை.

சமூக விடுதலை, பெண் விடுதலை,
பொருளாதார விடுதலை, கலாச்சா
ர விடுதலை இப்படிப் பல ஏற்பட

வேண்டுமென்பதும், அவற்றைப்பற்றிய கருத்துக்களுடன் கூடிய ஆக்கங்களையோ அல்லது கலை நிகழ்வுகளையோ ஏற்கலாம் என்பதும் அவர்களுக்குள்ளே இருக்கின்ற ஒரு முற்போக்கான அம்சம். முற்போக்கு என்ற பதம் முன்னுக்கு அதாவது சரியானதற்கு முன்னணியில் நிற்பது என்ற பொருளும் கொள்ளலாம். சம்பந்தா சம்பந்தம் இல்லாவிட்டாலும் கூடத் தம்மை, பிறர் முற்போக்குவாதிகள் என அழைக்க வேண்டுமென்பதில் இவர்களுக்கு அலாதிப்பிரியம். முன்னணியில் நிற்பவர்கள் என்பதும் இங்கே பொருந்தப் போவதில்லை. ஏனெனில் வெளிநாடுகளில் இருக்கின்ற இந்தப் புத்திஜீவிகளில் அநேகர் கோட்டு, சூட்டு உத்தியோகங்களின் நிரந்தரமாகி இருப்பவர்கள். சும்மா பொழுது போவதற்கு அந்த விடுதலை, இந்த விடுதலை சம்பந்தமாக எழுதிக்கொண்டிருப்பவர்கள். வெளிவரும் சஞ்சிகைகளும், எங்கள் சமூகத்திற்குள் காலங்காலமாகப் படித்தவர்க்குரிய மரியாதையைப் பேணும் விதத்தில் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இதை வளர்ச்சிப் போக்கென்றும் சொல்லப்படுகின்றது.

தென் ஆபிரிக்காவில் அநியாயமாக மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்றவுடன், "உமக்குப் பிரச்சனை விளங்கவில்லை ராமசாமி, அங்கு கறுப்பருக்குள்ளேயே சிக்கல். A.N.C, காட்டா ஆதரவாளர்கள் தங்களுக்குள்ளேயே அடித்துக் கொள்கிறார்கள். இதைச் சாட்டாய் வைத்து வெள்ளைக்காரனும் காட்டா உருவத்தில் கொலைகள் செய்கிறான். ஆனால், A.N.C., காட்டா தலைவர்கள் தங்களுக்குள்ளே ஒற்றுமையோடுதான் இருக்கிறார்கள்", இப்படியாகத் தமக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளும் திறமையும் இவர்களுக்குண்டு. 'எனக்கு இவையொன்றும் தெரியாமல்தான் அநியாயமாக மக்கள் கொல்லப்படுகிறார்கள்' என்று சொன்னேன், என்பது வேறு விடயம்.

களைத்துக் கொண்டிருக்கும்போது ஏதாவது விளங்கவில்லை என்று சொல்லிவிட்டால், நீ குமுதம் வாசிக்கத்தான் லாயக்கு எனக் குத்திக் காட்டி நகைக்கும் தன்மையும் இவர்களில் சிலரிடம். இதிலிருந்து, குமுதம் தரமான பத்திரிகை அல்ல என்பதும், நாம் குமுதத்தை வாசிப்பதில்லை என்பதும், ஏதோ முற்போக்கான சஞ்சிகைகளைத்தான் படிப்பவர்கள்; படமாக்குபவர்கள் என்பதும் இங்கே சொல்லாமல் சொல்லப்படுகின்றன.

ஆய்வுக் கட்டுரைகள் அது, இது எனப் பக்கம் பக்கமாக எழுதித் தீர்ப்பது இவர்களது நிரந்தரத் தொழில். கொஞ்சம் சமூக விடுதலை, கூடுதலாகப் பெண் விடுதலை. இப்படி இந்தக் காலப் 'பாஷனுக்கு' ஏற்றமாதிரி ஊறுகாய் தொடுவதைப்போல எழுதும் திறமையும் உண்டு. வாசகர்களும் இது அல்லவோ ஆக்கம் எனப் புளகாங்கிதம் கொண்டு தயாராக அலைகிறார்களோ என்னவோ. ஆனால், சொந்த வாழ்க்கையில் சமூகம் சம்பந்தமான இவர்களின் பார்வை பற்றியோ, பெண்களை எப்படி நடத்திக் கொ

ண்டிருக்கிறார்கள் என்பதுபற்றியோ
ாரும் கவலைப்பட்டதாய்த் தெரியவி
ல்லை.
பேர். பொன். இராமநாதன் தொடக்க
ஜீ.ஜீ. ஈறாக; தந்தை, தளபதி
வர், இன்றைய ஆலோசகர்வரை
ல்லாம் இவர்கள்தான்.
மாக்ஸின், லெனினிச தத்துவங்க
ளைக் கரையாமல் குடித்து, எங்கெ
ணையும் ஸ்டாலினையும் உச்சரிப்
தில் பெருமை கொண்டு, மாவோவி
ன் சிந்தனையில் இத்தனையாம்
க்கத்தில் இன்னமாதிரி எழுதப்பட்டு
ள்ளதென்று ஓதுதல் செய்வதும்
லவர்களுள் ஒரு சிலரின் சிறப்பு.
ன்னும், பாட்டாளிவர்க்க குணா
ச சிந்தனையுடன் தாங்கள் இருப்
தாகவும், அப்புரட்சியை நடத்துவத
ற்காகக் காத்திருப்பதாக கதை விடு
பதிலும் சிலர் வல்லவர்கள். கிழக்
ஐரோப்பிய மாற்றங்கள் ஆபத்
ானவை என்றும், பேர்லின் சுவர்
கர்க்கப்பட்டது தவறென்பதும்கூட
வரது சிலரின் அபிப்பிராயம். என்ன
தியான மனிதாபிமானம் என்
ைதப் பார்த்தீர்களா ?!
இன்னும் சிலர் கூட்டங்களிலே
பேசும்போது; 'இ---' எவ்வளவு கஷ்
மான ஒரு எழுத்து. எத்தனை
வளைவுகள். அங்க வளைச்சு
இங்க நெளிச்சு---அதனால
இ'னாவை மாற்ற வேண்டுமென்று
கோரிக்கைவிட---சபை கொல்லெ
ன்று சிரிக்க---
இப்ப எங்கட பிரச்சனை 'இ'
னாவா என்ன ? இப்படியாக
லவர்களுடனான சம்பவங்களை
பெரித்துக் கொண்டே போகலாம்;

வாசிப்பவர்க்கும் பொறுமை இருந்தால்.

புத்திஜீவிகள் எந்தக் கட்டத்திலும் நேரடியாக எழுதாமல் பூசி மெழுகி தப்பித்தான் கொள்கிறார்கள். ஏனெனில் அவர்கள் படித்தவர்கள்--- நாளைய சம்பவத்திற்காகச் சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள்.

எமது நாளைய சம்பவம்-----
அதுதான் எனக்கும் புரியாத ஒன்று.

• • • • • • • •

எவ்வளவுதான் மாற்றங்கள் ஏற்பட்டாலும்; புதிய, புதிய கருத்துக்கள் சொல்லப்பட்டாலும் கூட; சாதிப் பிரச்சனையானது எமது தேசத்திற்குள் மிகப்பெரும் பிரச்சனையாகவே இருந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு ஆயிரம் மைல்களுக்கப்பால் வாழ்கின்ற எங்களுக்குள்ளேயே இந்தப் பாகுபாட்டுப் பார்வைகள் இருக்கத்தான் செய்கின்றன. நாட்டில் ஆயுதத்தோடு நிற்பவர்களுக்குள்ளும் சாதியின் பெயரால் கொலைகள் கூட நடந்து கொண்டிருக்கின்றன. மொத்தத்தில், இது தீரக் கூடிய ஒன்றாகவே தெரியவில்லை. அண்மையில் பார்த்த தமிழ் சினிமா ஒன்றிலே இந்தச் சாதிப்பிரச்னை மையப்படுத்திச் சொல்லப்பட்டது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அந்தச் சினிமாவை உங்களுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எனக்கு.

சினிமாவின் பெயர் – 'ஆத்தா உன் கோயிலிலே'.

வழமையாக சினிமாக்களில் காட்டப்படுகின்ற தென்னிந்தியக் கிராமமொன்று. நடிப்பவர்கள் கொழுத்துச்

சியர்களும், கிராமத்தவர் கருத்து மெலிந்தும். நாயகன் சாதி குறைந்தவன். நாயகி அதற்கு எதிர்மாறு. (இது நானாக எழுதி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விடயமல்ல). வில்லன் ஊர்ப் பெரியவன். 'அது, அது இருக்கிற இடத்தில் இருந்தாத்தான் மதிப்பு, மரியாதை' என்ற வசனத்தை அடிக்கடி கூறி உயர்ந்த சாதித் தீக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருப்பவன். வில்லனின் அடியாள் சாதி குறைந்த பெண் ஒருத்தியுடன் உறவு கொண்டதைத் தொடர்ந்து, பஞ்சாயத்துக் கூட்டப்படுகின்றது. பஞ்சாயத்துத் தலைவனும் இந்த ஊர்ப் பெரியவன்தான். சபையிலே, இருவருக்கும் திருமணம் செய்விப்பதாக உறுதியளிக்கப்படுகிறது. ஆனால், பெண்ணின் தகப்பனைத் தனியாகக் கூப்பிட்டு, சாப்பாட்டில் நஞ்சைக் கொடுத்து மகளைக் கொல்லச் சொல்லி வில்லனால் கட்டாயப்படுத்தப்படுகின்றது. இல்லையேல் குடும்பமாகக் கொலை செய்யப்படுவீர்கள் என்ற பயமுறுத்தல் வேறு. இப்படியாக, பல பெண்கள் நஞ்சை உட்கொண்டு சமாதியாகின்றார்கள். நாயகி உயர்சாதியைச் சேர்ந்தவளொன்றாவும்; நாயகனை திருமணம் செய்ததனால் பல சூழ்ச்சிகளின் மத்தியில் சமாதியாகின்றாள். பட்டணத்தில் படித்துக் கொண்டிருக்கும் ஊர்ப் பெரியவனின் மகன் கிராமத்துக்கு வருகின்றான். அவனும் எதிர்மாறாக ஒரு பெண்ணை விரும்புகின்றான். பிறகென்ன, நஞ்சு விளையாட்டுத்தான். ஆனால் படமும் முடிகின்ற கட்டத்தை நெருங்கியதால், நாயகன் தலைமையில் பாதிக்கப்பட்டவர்கள் எல்லோரும் சேர்ந்து அதே விஷத்தை வில்லனைப் பருகச் சொல்லிக் கட்டாயப்படுத்துகிறார்கள். தப்ப முடியாத நிலையில் விஷம் பருகப்படுகிறது. சாதிப் பிரச்சனை தீர்க்கப்பட்டதாக இயக்குனரும் திருப்தி அடைந்து வணக்கம் சொல்லுகிறார்.

இப்படி சாதிப் பிரச்சனையால நஞ்சைக் கொடுத்துக் கொல்லுகின்ற அவலங்கள் எங்குதான் நடக்கின்றன என்பதைவிடவும்; இந்தச் சினிமாவைப் பார்த்து சாதி வெறி பிடித்தவர்கள் சொல்லப்படும் நடைமுறையைப் பின்பற்றலாம் அல்லது அப்படிப் பின்பற்றுபவர்களை மற்றவர்கள் அதே நஞ்சைக் கொடுத்து கொலை செய்யலாம். இந்தக் கருத்துத்தான் இங்கே சொல்லப்படுகிறது. வில்லன் கொலை செய்யப்பட்டதால் அந்தக் கிராமத்திலே சாதிப் பிரச்சனை தீர்க்கப்பட்டதா? என்ன அதுவுமில்லை.

திரைப்படத்துறையில் இருக்கின்ற கூடுதலானவர்கள் உயர் சாதியினராயும், நடைமுறையில் நல்ல சிந்தனைகளுக்கும் இவர்களுக்கும் வெகுதூரம் என்பதுமே இவற்றுக்கான காரணங்களாகும். மேலும், வெளிச் சமூகம் சாதியினையும், மதத்தினையும், கட்சிகளினையும் பிளவுபட்டுப் பூதாகரமாக குழி பறிப்புச் செய்து கொண்டிருக்கும்போது, இந்தத் தமிழ்ச் சினிமாக்களிலும், அதை இயக்குபவர்களிடமும், எமக்கு ஏற்புடைய கருத்துக்களை எதிர்பார்ப்பது அவ்வளவு சுலபமானதல்ல. வெளிச் சமூகம் மாறும்மட்டும்,

இந்தச் சினிமாக்களில் அத்திபூத்தாற் போல் சொல்லப்படும் நல்ல கருத்துக்களும் கூட விழலுக்கிறைத்த நீராகத்தான் இருக்கும். ஏனெனில் அந்த நல்ல கருத்துக்களைச் சொல்பவர்களோ, அந்தக் கருத்துக்களுக்கு மாறாகத்தான் வெளி உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க கலாச்சார சீரழிவுகளால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் உலகம் முழுவதும் பரவிய நிலையில் Disco, அரைகுறை நடனம் போன்றவையும் கூடுதலாக இப்போ தென்னிந்திய சினிமாக்களிலும் நிரப்பப்படுகின்றன. சமூகமும் இதனை விரும்புவதால் படங்களும் விழாக் கொண்டாடுகின்றன. சமூகத்தின் இந்த நிலைமையை தங்களுக்குச் சாதகமாக்கி, அந்த நிலைமையை மாற்ற விரும்பாமல் படம் தயாரிப்பவர்கள் எல்லோரும் பணம் புரட்டுகின்ற அவசரத்தில்...

இந்த நிலையில் நல்ல கருத்துள்ள படங்கள் எல்லாம் விரைவாகப் பெட்டிக்குள் போய்விடுகின்றன. அதனால் சினிமாவின் ஊடாக நல்ல கருத்துக்கள் சொல்லப்படுவதால் சமூகம் நன்மை பெறும் என்பதைவிடவும், சமூகத்தினால் சினிமாவின் போக்கு மாற்றம் பெறவேண்டும் என்பதே நடைமுறைச் சாத்தியமானது.

ரஜனிகாந்தின் ரசிகர் மன்றங்களில் பதிவு செய்தோரில் 18 வயதிற்கு மேற்பட்டோர் 17 லட்சத்துக்குமேல் என்ற உண்மையின் பின்பும் எமது எதிர்பார்ப்புகள் எல்லாம் (?) தான். என்றாலும் வித்தியாசமாக எழுதுபவர்களுக்கு மட்டும் உதவி செய்யும் விதத்தில் ஒருசில படங்கள் வெளிவரத்தான் செய்கின்றன.





மேற்படி புகைப்படத்திற்கு பொருத்தமான வசனம் ஒன்றை எழுதி அனுப்புங்கள். வசனம் அறிவுரையாக, ஆலோசனையாக, நகைச்சுவையாக அல்லது புதுமையாக இருக்கலாம்.

தரமானவை பிரசுரமாகும். மிகவும் தரமான அல்லது சிறந்த வசனம் முன் அட்டையில் இடம் பெறும்.

அனுப்ப வேண்டிய
முகவரி:

PITER KULAM,
"KADAL",
METZMACHER STR. 07,
4018 LANGENFELD.

[பக்கம் 20 இலிருந்து.......]

'ஏலையா'வின் மறுப்பையும், பதிலையும் தந்திருக்கின்றோம். அவற்றை 'கூடல்' சஞ்சிகையில் பிரசுரிக்குமாறு வேண்டுகிறோம்.

அன்புடன்,
கா.க. முருகதாசன்,
ஆசிரியர், 'ஏலையா'
4200 OBERHAUSEN-11.

• • • • • •

நட்புடன் சோழியானுக்கு,

கூடலின் ஊடல் பார்த்தேன். மே திங்கள் அலையில் அடித்து வந்த வெளியேற்றம் கண்டேன். அதனால் இதை எழுதுகின்றேன். 11வது இலக்கியச் சந்திப்பில் வாசிக்கப்பட்ட கட்டுரையில் எனது கருத்துக்களைக் கூறினேன். அதுபோன்று உங்களுக்குப்பட்டதை நீங்களும் எழுதியதை மெச்சுகிறேன்.

"---- இச் சஞ்சிகைகளுக்கு எழுதும் வல்லுநர்களும் தங்களின் ஆக்கங்களை அந்த வகையிலேயே எழுதுகின்றார்கள். ஆனால் வேறு சஞ்சிகைகளுக்கு எழுதும்போது இவர்களின் கருத்தும் பார்வையும் சஞ்சிகைகளுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. இப்படியான எழுத்துக்கள் மூலம் எழுத்தாளர்கள் தங்களின் தளர்நிலையைக் காண்பிக்கின்றார்கள். கொள்கை இருந்தால் அதை நிலைநாட்ட துணிவும் உறுதியும் வேண்டும். உறுதியற்றவர்களிடம் கொள்கை இருந்தென்ன இல்லாமலென்ன ?!" - இதுவே என்னால் வாசிக்கப்பட்டது.

எழுத்தாளர்கள் ஒரு சஞ்சிகைக்குத்தான் எழுத வேண்டும் என்றோ, பல சஞ்சிகைகளுக்கு எழுதக் கூடாது என்பதோ இதன் பொருளாகா. அல்லது கொள்கையும், நேர்மையும்,

துணிவும் இல்லாதவர்கள் எழு
தாளர் ஆகமாட்டார்களோ என்
ம் நான் சொல்ல வரவில்லை.
ஆனால் ஒரு எழுத்தாளனிடம்
ல்பாக இருக்க வேண்டியவைக
யும் அவனால் பேணப்பட வேண்
யவைகளையும் கூறினேன். ஒ
வொருவரின் சுதந்திரத்தையும்
றுதிப்படுத்தும் உரிமைகள் பே
பாதுகாக்கப்பட வேண்டும். அதே
னை மறுக்கப்படும் சுதந்திரத்தி
காகப் போராடும் உரிமை ஒவ்வொ
ருவருக்கும் உண்டு என்ற கரு
தோடு இணையுடையவன்.

"சஞ்சிகைகளுக்கு ஏற்ப எழுத்
ளர்கள் எழுதுவதை அவர்கள
தளர்நிலை அல்லது துணிவின்
என்று கூறுவது ஒரு எழுத்தாள
குறிப்பிட்ட சஞ்சிகைக்குச் சேவ
செய்வதைப் போன்றது" என்ற
களின் கருத்தின் மூலம் நான் கூ
முற்பட்ட உண்மையை நீங்க
ஏற்றுள்ளீர்கள். 'சஞ்சிகைக்கு சே
கம் செய்தல்' என்ற சொற்பதங்
ளை வலிந்து அழைத்துப் புகுத்தி
கொண்டுள்ளீர்கள். அப்படியான
உங்களையும் ஏன் இந்த வகை
ள் சேர்க்கக் கூடாது? இதிலிரு
ந்து எனது கருத்தின் தாக்கம்
ங்களிடம் ஒரு உணர்வைத் தோ
ற்றுவித்துள்ளதை என்னால் உண
ர முடிகிறது.

மூன்று கால் முயலை நான்கு கா
களாக மாற்றமுடியாது. ஏனெனி
நீங்களோ அது மூன்று கால் என்
ஒப்புக் கொண்டுவிட்டதனால். ஆ
ல் நான் பிடித்த முயலுக்கு மூன்
கால் என்ற கருத்தை மாற்றிட

மைக்கலாம். காரணம் இயல்பாக
மனுக்கு கால்கள் நான்கு என்பதால்.

— ஆ. வேலாயுதம்,
4300 ESSEN. 1.

• • • • •

அன்புடன் 'ஏலையா' ஆசிரியரு
கு!

பேர்லினில் நடைபெற்ற ஒன்று
டலின்போது, தங்கள் தலையங்
த்தில் இடம்பெற்ற கருத்தை
ர் கூறினார் என்று குறிப்பிடவி
லை. இலக்கியச் சந்திப்பின்போ
, அக்கருத்துக்கு உரியவர்
கின்றுமார் எனத் தெரிய வந்
து. பெயர் குறிப்பிடாமல் ஒருவி
யம் இடம்பெறுகிறதென்றால்,
தைக் 'கிசு கிசு' விடயம் என்று
-றுவதில் பிழை என்ன?! பிழை
ல்லை என்பது எனது அறிவுக்
கட்டிய முறை. இப்படியான விட
தை வேறு எப்படி அழைக்க
ம் என்பதைத் தாங்கள்தான் கூற
வண்டும். மேலும், 'ஏலையா'வை
றைப்படுத்த வேண்டும் என்ற
ன்னத்தில் எழுதவில்லை.

— சோழியான் —

லையா' ஆசிரியருக்கு!

"அதிருப்தியை நோக்கிக் கொண்
---" கட்டுரையில் தாங்கள் குறி
ிட்ட குற்றச்சாட்டுத் தொடர்பாக...
ஏலையா' தொடர்ந்து இலக்கி
ச் சந்திப்புக்களில் பங்கு பற்றி
ாலும் இலக்கியச் சந்திப்புத்
தொடர்பாக எந்த ஒரு ஆக்கபூ
வமான கருத்துக்களையும் சந்தி
ில் முன்வைக்கவில்லை. ஜேர்
னியில் வெளிவரும் தமிழ்ச் சஞ்
சிகைகளில் இலக்கியச் சந்திப்புப்
பற்றிய செய்திகளைத் தேடிப் பார்
க்கவும் — தேவையாயின் ஏலையா
விலும் அது ஏதாவது ஆக்கபூர்வ
மான ஆலோசனைகள் சொல்லி
யிருக்கின்றதா என்று தேடிப்
பார்த்தால் தங்களுடைய குற்ற
ச்சாட்டு அர்த்தமற்றது என்பது
தெரியவரும். மேலும் "இலக்கியச்
சந்திப்பா இயக்கச் சந்திப்பா?" எ
ன்ற தங்களுடைய கட்டுரை கூட
வெளியில் நின்று எழுதும் சஞ்சி
கைகள் எழுதுவது போலவே இ
ருந்தது. இக் கருத்தை ஏலையாவி
ல் எழுத முன்னர், இலக்கியச்
சந்திப்பில் சொல்லிவிட்டு எழுதி
யிருக்கலாம். அவ்வாறு சொல்லா
த நிலையில் எழுதுவதாலே வெ
ளியில் நின்று எழுதும் சஞ்சிகை
களில் 'ஏலையா'வையும் வைத்து
என்னால் எழுத முடிந்தது.

— தம்பிராசா —

• • • • •

அன்புடன் திரு. ஆ. வேலாயுதம்
அவர்கட்கு,

தங்கள் கடிதத்திற்கு நன்றி.
அக் கடிதத்தில் தங்கள் கருத்
தை நியாயப்படுத்தும் முயற்சியில்
முன்னுக்குப் பின் முரணாகக்
கூறியுள்ளீர்கள்:

"சஞ்சிகைக்கு ஏற்ப எழுத்தா
ளர்கள் எழுதுவதை அவர்களது
தளர்நிலை அல்லது துணிவின்
மை என்று கூறுவது எழுத்தாள
னைக் குறிப்பிட்ட சஞ்சிகைக்குச்
சாதனம் செய்வதைப் போன்றது'
என்ற தங்களின் கருத்தின் மூலம்
நான் கூற முற்பட்ட உண்மையை

நீங்களோ ஏற்றுக் கொண்டுள்ளீர்கள் - இது தங்களின் கடிதத்தில் ஒரு பகுதி.

பொதுவாக ஜேர்மனியில் பெரும்பான்மையான சஞ்சிகைகள், தற்போதும் கூட விடுதலை என்று சொல்லி தன்னினத்திற்கே வாக்கரிசி போடும் நேற்றைய இன்றைய போலி இயக்கங்களிற்கு ஆதரவாகத்தான் வெளிவந்து கொண்டிருக்கின்றன. நடுநிலையாக உண்மைகளை எழுதும் கடல், தூண்டில் போன்ற சஞ்சிகைகளைக் காண்பது அரிது. இந்த நிலையில் சில இயக்கங்களின் செயற்பாடுகள் சில சந்தர்ப்பங்களில் நியாயமானது போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்தும்போது, உண்மையை எழுத வேண்டும் என்ற ஒரே நோக்கில் எழுதும் எழுத்தாளர்கள் தடுமாறுகிற சந்தர்ப்பங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது. இந்த நிலையில் ஏற்கெனவே அவைகள் பொய் என்று ஒதுக்கப்பட்டவை கூட சில காலத்தின் பின்னர் கூட உண்மையாக நிரூபணமாகலாம். காரணம் எழுத்தாளன் தீர்க்கதரிசியல்ல; தீர்க்கதரிசனத்தைத் தேடுபவன்.

இப்படியான காலகட்டத்தில் சில சஞ்சிகைகள் எழுத்தாளன் இப்படித்தான் எழுத வேண்டும் என எதிர்பார்க்கின்ற நிலையில் அவனது புதிய உண்மையான கருத்துக்கள் புறக்கணிக்கப்படும் போது, அவன் வேறு சஞ்சிகைகளை நாடுவதில் தவறென்ன?! கொள்கை உண்மைகளை மறைப்பதுதான் இன்றைய ஈழத்தமிழர் சரித்திரம். இந்த நிலைமையில் 'கொள்கை' என்ற பட்டையைப்போட்டு பொய்களுக்கும் நயவஞ்சகத்துக்கும் வக்காலத்து வாங்குவதைவிட, 'தளர்ந்த' எழுத்தாளன் என்று பெயர் வாங்கினாலும் உண்மையை எழுதுவதே மேல்.

மற்றும், மூன்று கால் முயலை என்னிடமே திருப்பித் தந்திருக்கிறீர்கள். தங்களுக்குத் தெரியாததா என்ன?!

அன்புடன்
- சோழியான் -

---

அலை 5 ஆவணிமாதம் வெளிவர மாட்டாது. 'கடல்' அலை 5 உம் கடல் அலை 6உம் புரட்டாதி மாதம் ஒன்றாக வெளிவரும்.

- ஆசிரியர்கள் -

## றுக்கெழுத்துப் போட்டி இல: 4

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | | 4 | |
| | 7 | 8 | | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | | 20 |
| 21 | | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | 30 |
| 31 | | 33 | | |
| 36 | 37 | 38 | | 40 |

### டமிருந்து வலமாக:

→4 STUTTGARD நகரில் இருந்து வெளிவரும் சஞ்சிகை. ஆசிரியர் தலையங்கம் ஆங்கிலத்திலும் இடம்பெறும்.

→10 தென்னாசிய நிறுவனத்தினூடாக வெளிவரும் மாத சஞ்சிகை. கடலோடிகள் இது வைத்திருப்பார்களாம்.

→12 வருமானத்தில் அரசுக்கு செலுத்துவது

→15 அளவிடு.

→17 ஒரு அவயம்.

→20 பனை மரத்தை அட்டையில் தாங்கி இலவசமாக வெளிவரும் சஞ்சிகை.

→23 மனிதனுக்கு இது ஆறு என்பர். மிருகங்களுக்கு ஐந்தாம்.

→25 இந்துக்களின் அடையாளம் இறுதி எழுத்து விடுபட்டுள்ளது.

←→28 வியாபாரம் செய்ய தேவையானது. இரண்டு அல்ல. குழம்பியுள்ளது.

←→30 மனிதனின் செயற்பாடுகளான நடத்தல், ஓடுதல் போல ஒன்று குழம்பியுள்ளது.

→33 சிகரெட்டை மூட்ட நெருப்பு தேவை. தொடர்ந்து பற்ற இது தேவை.

←37 நான் பன்மையானால்... வலமிருந்து இடமாக.

### மேலிருந்து கீழாக:

→36 சிறுவர்களுக்காக வரும் மாதசஞ்சிகையானாலும் பெரியவர்கள் வாசிக்கவும் விடயங்கள் உண்டு.

→20 பெண்ணின் பெயர்களில் ஒன்று. கல்யாணத்தை நினைவுபடுத்துவது குழம்பி உள்ளது.

→17 ஓவியம் வரைய தேவையானது.

←13 DUISBURG நகரிலிருந்து வெளிவரும் இலவச மாத சஞ்சிகை தலைகீழாக உள்ளது.

←14 தோலில் ஏற்படும் ஒரு உணர்வு. தலைகீழாக.

→31 DORTMUNDல் இருந்து இருமாதம் ஒருமுறை வெளிவரும் சஞ்சிகை.

8→33 கட்டளையிடுதல்; ஒன்றை செய்யுமாறு பணித்தல்.

15→40 இங்கே இந்த மரம் இல்லை. ஆனால் BREMEN இல் இருந்து இந்த இதழ் வெளிவருகிறது.

7→37 ஒருவகைப் புல் BIELEFELD இலிருந்து வெளிவரும் சஞ்சிகைக்கு பெயராக உள்ளது.

→38 மங்கல வாத்தியங்களில் ஒன்று குழம்பிவிட்டது.

முடிவு திகதி: 30.07.1991

[ 4ம் பக்கத் தொடர்ச்சி----- ]

பாடசாலைக்குக் கள்ளம் போட்டுத் தாங்கள் ஆசிரியர் வேலை பார்த்ததை அண்ணாவும், தங்கையும் சொல்லிச் சிரித்துக் கொண்டுபோனார்கள்.

- செல்வி பிங்கலை ராஜேஸ்வரன்

---

முத்து, கடலின் அடியிலிருந்து பெறப்படுகின்றது. கடலிலிருந்து முத்தை எடுப்பதற்கு மிகவும் கஸ்டப்பட வேண்டும். அப்படிக் கஸ்டப்பட்டு முத்தெடுப்பதை 'முத்துக்குளித்தல்' என்றுசொல்வார்கள். நாங்கள் இந்த வினாவிடைப் போட்டியை , முத்துக்குளித்தல் என்றே குறிப்பிடுகின்றோம்.

## முத்துக்குளித்தல் 1

1) கடலைக் குறிக்கும் பல சொற்கள் தமிழில் இருக்கின்றன. உங்களுக்கு அதில் எத்தனை சொற்கள் தெரியும்? ஆகக்குறைந்தது ஒரு சொல்லாவது எழுதுங்கள்.

2) கடலிலிருந்து எமக்குக் கிடைப்பவற்றில் ஏதாவது மூன்றைக் குறிப்பிடுங்கள்.

3) உலகில் உள்ள மிருகங்களில் மிகப் பெரியது எது? அது எங்கே வாழ்கின்றது?

4) ஜேர்மனியில் கோதுமை போல இலங்கையில் எதைக்குறிப்பிடலாம்?

5) தற்போது டெனிஸ் விளையாட்டில் பெண்களில் மொனிக்காசெலஸ் முதலாவது இடத்தில் இருக்கின்றார் என்பது உங்களுக்குத் தெரியும். அவள் எந்த நாட்டைச் சேர்ந்தவள்? அந்த நாட்டின் தலை நகரின் பெயர் என்ன?

விடைகளை 30.7.91ற்கு முன்னர் கடல் சஞ்சிகையின் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.விடைகளுடன் உங்கள் பெயர் விலாசம், பிறந்த திகதி என்பவற்றையும் குறிப்பிடவும். சரியான விடை எழுதியவருக்கு 'விகடராமன் கதைகள்' என்னும் சிரிப்புக் கதைப்புத்தகம் முத்தாகக் கிடைக்கும். பலர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

** ஒத்த மனமுடையவர்கள் சேர்ந்தால் கடலையும் வற்ற வைக்கலாம்.

இந்தியா

நானும் என் சகோதரனும் எங்கள் அத்தானுக்குப் பகையானாலும், அந்நியன் வந்தால் நாங்களும் அத்தானும் அவனுக்குப் பகையாவோம்.

இந்தியா

வாதியும் எதிரியும் ஒரே படகில் சென்றால் சாட்சிகள் நீந்தித்தான் செல்லவேண்டிவரும்

கீழைநாடுகள்

ஒற்றுமை என்ற வலிமை இருக்கும் என்றால், அடங்கியிருப்பது பிழையாகாது.

இலத்தீன்

வெளவால் தன் விருந்தாளியிடம் 'நான் தொங்குகிறேன் நீயும் தொங்கு' என்று சொல்லும்

இந்தியா

இது ஒரு இலவச மாதாந்த வெளியீடு.
தபாற் செலவாக 6 × 60 பெனிக் முத்திரைகளை அனுப்பி, ஆறு மாத வெளியீடுகளை பெற்றுக் கொள்ளலாம்.

இச் சஞ்சிகையில் இடம்பெறும் கருத்துக்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாவர். புனை பெயரில் எழுதுவோர் சொந்தப் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

ஆக்கதாரர்கள், வாசகர்கள் யாவரும்
கடல் பற்றிய தொடர்புகளுக்கு
வெளியீட்டாளர்

*********************
Piter Kulam,
Metzmacher Straße - 07,
4018 Langenfeld.
*********************

Die Erstellung dieses Heftes wurde durch das Diakonische Werk des Evang. Kirchenkreises Leverkusen ermöglicht.